விலை ரூபா 1—25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 பங்குனி 15 றஜப் 5 இதழ் 46
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 28-3-1985

## மருத்துவமனையிலிருந்து 'அமிர்' வெளியேறினார்

### உடல்நிலையில் பூரண திருப்தி

(சென்னை)

சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் சுக மடைந்து நேற்று மாலை நான்கு மணியளவில் மருத்துவ மனையிலிருந்து வெளியேறி, விருந்தினர் விடுதிக்குச்சென்றார்.

விருந்தினர் விடுதியில், இரண்டுவாரம் அவர் ஓய்வெடுப்பார் என்றும், அவர் சுகமாக இருப்பதாகவும் திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் நேற்றுக்காலை தெரிவித்தார்.

திரு. அ. அமிர்தலிங்கத்தின் உடல் நிலைகுறித்து, சென்னை 845920 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு எந்தநேரத்திலும் சுகம் விசாரிக்கலாம் என்று திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் நேற்று 'ஈழநாடு'விடம் தெரிவித்தார்.

★★★ இலங்கைத் தமிழர் பிரச்னை

# "இந்தியாவின் ஆலோசனைகளை இலங்கை வரவேற்றுள்ளது"

## எதிர்பார்த்ததைவிட பெரும் முன்னேற்றம் என்கிறார் பண்டாரி

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்னையைத் தீர்த்துவைக்க பாரதம் தெரிவித்த ஆலோசனைகளை இலங்கை அரசு வரவேற்றிருப்பதாக கடந்த மூன்று தினங்களாக இலங்கைத் தலைவர்களுடன் உயர்மட்டப் பேச்சுக்களை நடத்திய பாரத வெளியுறவுச் செயலாளர் திரு. ரமேஷ் பண்டாரி தெரிவித்தார்.

நேற்று மாலை புதுடில்லி செல்வதற்கு முன்னர் தமது இலங்கை விஜயம் குறித்து கருத்துத் தெரிவித்த திரு. பண்டாரி, இலங்கைத் தலைவர்களுடன் தான் நடத்திய பேச்சுக்கள் எதிர்பார்த்ததற்கு மேல் பயனளித்ததாகவும் கூறினார்.

(8ம் பக்கம் பார்க்க)

✱ அமைச்சரவை முடிவுகள்

## பொலிஸ், ஆயுதபடைகளுக்கு ஆள்சேர்க்க புதிய திட்டம்!

(கொழும்பு)

ஆயுதப்படைக்கும் பொலிஸ் படைக்கும் ஆட்களைச் சேர்ப்பதற்கு விரிவானதிட்டம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது.

மத்திய ஆள் அணித் தெரிவு நிலையம் ஒன்றை அமைப்பதன் மூலம் ஆட்களைத் தெரிவுசெய்வதை கூட்டிணைக்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து முடிவெடுக்கப்பட்டது.

(8ம் பக்கம் பார்க்க)

அமைச்சர் அல்விஸ் நேற்றுக் கூறினார்:

## பண்டாரியின் விஜயம் குறித்து கருத்து வெளியிடுவதற்கில்லை

(கொழும்பு)

இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரியின் இலங்கை விஜயம் குறித்துஎது வித கருத்துக்களும் வெளியிடுவதற்கில்லை என்று ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் தெரிவித்தார்.

நேற்றுகாலை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில், நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு அமைச்சர் கூறினார்.

அவரது பேச்சுக்கள் முற்

[8ம் பக்கம் பார்க்க]

## கிளிநொச்சியில் மாணவர் பகிஷ்கரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்தமாணவர்கள் நேற்றுமுன் தினம்முதல் பூரண பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இம் மாவட்டத்தில் உள்ள நகரப் பகுதி, கிராமப்பகுதி பாடசாலைகள் யாவும் மாணவர்

[8ம் பக்கம் பார்க்க]

## அனுராவிடம் பண்டாரி கவலை தெரிவித்தார்

(கொழும்பு)

இந்தியாவிற்கு இலங்கையிலிருந்து பெருமளவில் அகதிகள் வருவதால் இந்தியா கொண்டுள்ள கவலையை திரு. ரமேஷ் பண்டாரி, எதிர்க்கட்சித் தலைவர் திரு அனுரா பண்டாரநாயக்காவிடம் தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சித் தலைவரை நேற்றுச் சந்தித்த இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரி இந்தியாவின் இந்தக் கவலையைத் தெரிவித்ததாக எதிர்க்கட்சித் தலைவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் 45 நிமிடம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பு சுமுகமாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஜனாதிபதி ஜே.ஆர். இந்தியா விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பாகிஸ்தான் விஜயத்தை முடித்துக் கொண்டு, குறுகியகாலவிஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா செல்லாமென கொழும்பில் ராஜதந்திரவட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி ஜெயவர்த்தன நாளை பாகிஸ்தானுக்குவிஜயம் செய்யவுள்ளார், இவர் அங்கு அடுத்தமாதம் 4ம்திகதி வரை தங்கியிருப்பார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன அடுத்தமாதம் 5ம் திகதி இந்தியாவுக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு நாடுதிரும்புவாரென்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## தெல்லிப்பழை சம்பவம்: ஒருவர் பலி; பலர் காயம்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழையில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் பலியானார். பலர் காயமடைந்தனர்.

தெல்லிப்பழை, மல்லாகம், குரும்பசிட்டிப் பகுதிகளை விமானங்களும் ஹெலிகாப்டர்களும் தாளப்பறந்து நோட்டம் விட்டன. (தணிக்கை)

இச்சம்பவத்தின்போது தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க உதவிக்காசாளர் திரு இ கதிர்

[8ம் பக்கம் பார்க்க]

# இந்தியாவில் தற்போது 85,600 இலங்கை அகதிகள்

## மேலும் 4,000 வீடுகள் கட்ட மத்திய அரசு அனுமதி

(புதுடில்லி)

இலங்கையிலிருந்து இதுவரை 85,600 தமிழர்கள் அகதிகளாக இந்தியாவிற்கு வந்திருப்பதாக லோகசபையில் நேற்று அறிவிக்கப்பட்டது.

லோகசபையில் நேற்று நடைபெற்ற விவாதம் ஒன்றில் உள்துறை ஸ்டேட் அமைச்சர் திருமதி ராம்துலாரி மீனா இத் தகவலைத் தெரிவித்தார்.

இதேவேளை தமிழகமேலவையில் கொண்டுவரப்பட்ட கவனஈர்ப்புப் பிரேரணை ஒன்றுக்குப்பதிலளித்த அமைச்சர் திரு. மு ராமசாமி இலங்கையிலிருந்துவரும் அகதிகளுக்கென மேலும் 4000 வீடுகளைக்கட்ட மத்திய அரசு அனுமதியளித்துள்ளதாகக் கூறினார்.

மண்டபத்தில் 3000 வீடுகளும் தூத்துக்குடியில் 1000 வீடுகளும் கட்டப்படுமென்றும் அமைச்சர் ராமசாமி கூறினார்.

மாநில மின்துறை அமைச்சர் பண்டிருட்டி எஸ். ராமச்சந்திரன் பேசுகையில், இலங்கைத் தமிழர்களை நிரந்தரமாகக் குடியமர்த்துவதை தமிழக அரசோ மத்திய அரசோ விரும்பவில்லை என்று குறிப்பிட்டார்.

அப்படியாக நிரந்தரமாகக் குடியேற்றினால் இலங்கை அரசின் விருப்பம் நிறைவேறிவிடும் என்றும் அவர் கூறினார்.

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

Video Camera, Hitachi VKC 800 விற்பனைக்குண்டு. 45, பழம் ரோட், கந்தர்மடம். தொலைபேசி: 23759. (2473)

---

T. V. 20'' கலர் Philips விற்பனைக்குண்டு. 14'' கலர் T. V. யுடன் மாற்ற சம்மதம் விபரங்கட்கு சாயி ரெலி ரேப், அச்சுவேலி. தொலைபேசி: 23759. (2472)

---

உங்கள் கோழிகளுக்குரிய தீனிவகை, மீன்தூள் எதுவானாலும் யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ள அண்ணா இண்டஸ்றீஸ் (கிளை) யும்மா மொஸ்க் லேன், யாழ்ப்பாணம் 2479

---

N V 390 வீடியோ டெக்கும், Sony 20'' கலர் T. V. யும், வீடியோ கசட்டுகளுடன் உடன் விற்பனைக்குண்டு. G. வில்லியம், அலுக்கைச் சந்தி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி. 2493

---

மானிப்பாய் ரோட்டில் பழைய C. T. B. டிப்போ அருகில் உள்ள 5 1/4, பரப்பு வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: நாகராஜேஸ்வரி மோட்டோர்ஸ், 797, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 2494

---

முதல்தரமான விஜிதா நம் 1 நாட்டரிசி கல்லில்லாமல் கைதேர்ந்த தொழிலாளர்களினால் கல் அரித்து தயாரிக்கப்படுபவை வர்த்தகர்கள் விரும்பி விற்பனை செய்வதும் பாவனையாளர்கள் கேட்டு வேண்டுவதும் விஜிதா நம் 1 நாட்டரிசி. தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும்; விஜிதா அரிசி ஆலை, தாவடி தெற்கு, கொக்குவில். 1909

---

கொல்லப்பட்டடை ஆயுதச் சாமான் இங்கே விற்கப்படும். விற்பனை செய்பவர் இராசரெத்தினம் விலாசம்: இலக்கம் 56, செபஸ்தியன் வீதி, பாஷையூர். 2515

---

4½'' TRANSIT THEODOLITE 20'' வாசிப்பதும் வேறும் பல அளவைக்கும் படம் வரைதலுக்கும் உரிய கருவிகள். தொடர்பு: தம்பிராசா, பெருமாக்கடவை, அளவெட்டி தெற்கு. 2502

## காணவில்லை

யாழ். நவீன சந்தையிலுள்ள வெற்றிலைக் கடையில் திங்கட்கிழமை மாலை பேர்சுடன் அடையாள அட்டை தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் கந்தையா நாகேந்திரன், 2-ம் வட்டாரம், சரவணை மேற்கு, சாவணை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். அல்லது வெற்றிலைக் கடையில் கொடுக்கவும். 2507

## தவறிவிட்டது

மண்டைதீவு, சுப்பிரமணியம் சோதிலிங்கம் இல :- 220130118-V என இடப்பட்ட தேசிய அடையாள அட்டை யாழ்ப்பாணத்திற்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சு சோதிலிங்கம், வட்டாரம் 2, அல்லைப்பிட்டி, என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். 2519

## விற்பனைக்கு

14 மாத வயதுடைய முட்டையிடும் (75%) கோழிகள் மலிவு விலையில் ஒன்று ரூபா 25/- வீதம் விற்கப்படும். விபரங்களுக்கு: ''கார்த்திகை''. பூதர்மடத்தடி, கோப்பாய் வடக்கு, பொ. சச்சிதானந்தம். 2503

---

யாழ். இந்துக்கல்லூரிக்கு அண்மையில் நல்ல சுற்றாடலில் அமைந்துள்ள 1½ பரப்புக்காணி வீட்டுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு செ மகேசன், சட்டத்தரணி, வைமன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23138 (2523)

---

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

# இவ்வகை ஆசிரியர்களுக்கும் விஞ்ஞானப் பட்டதாரிகளுக்குரிய உயர்வான சம்பளம்

## கல்வி அமைச்சின் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

தூயகணிதம், பிரயோக கணிதம் ஆகிய பாடங்களுடன் ஏதாவது ஒரு கலைப்பாடத்தையும் பட்டத்தேர்வுக்கு எழுதிச் சித்தியடைந்த கலைமாணி பட்டதாரிகள் அனைவரும் விஞ்ஞானப் பட்டதாரிகளாகக் கணிக்கப்பட்டு விஞ்ஞானப்பட்டதாரிகளுக்குரிய உயர்வான சம்பளம் வழங்கப்படல் வேண்டுமெனக் கல்வியமைச்சு யாழ்ப்பாணம்கல்வித் திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறான பட்டதாரிகளுக்கு இதுவரை கலைப்பட்டதாரிகளுக்குரிய சம்பளம் வழங்கப்பட்டது முறையற்றது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் கல்வி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு சென்றதையடுத்து மேற்கண்டவாறு கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

1983ஆம் ஆண்டு பட்டத் தேர்வுக்குத் தோற்றி சித்தி பெற்ற அனைத்து ஆசிரியர்களுக்கும் 1984 ஜனவரி முதலாந் திகதியிலிருந்து பட்டதாரிச் சம்பளம் வழங்குமாறு கல்வியமைச்சு யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தை மீண்டும் பணித்துள்ளதென இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

பலமாதங்களுக்கு முன்னர் இது சம்பந்தமான சுற்றிக்கை அனுப்பப்பட்ட போதும் பட்டதாரிச் சான்றிதழின் செயற்படுந் திகதி 1984 ஜனவரி முதலாந் திகதியென இருந்த காரணத்தினால் யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம் உரிய சம்பளம் கொடுக்க மறுத்திருந்தது.

இதனால் பாதிப்படைந்த ஆசிரியர் சார்பாக இ. த. ஆ. சங்கம் கல்வி அமைச்சின் கவனத்திற்கு மேற்படி விடயத்தைக் கொண்டு வந்ததை அடுத்து இவ்வாறான பணிப்புரையை யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்துக்குக் கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

# இன்றைய பலன்

மாதம்—பங்குனி
தி•தி—15(28-3-1985)
வாரம்— வியாழன்
திதி— ஸப்தமி பின் இரவு வரை
நக்ஷத்திரம் — மிருகசீரிடம் பின் இரவு வரை

மேடம்: குமுறும் நெஞ்சத்துடன் நாளைக்கடத்துவீர்கள்.

இடபம்; ஆத்திரப்படுவதால் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும்.

மிதுனம்: இன்று எதிர்பார்க்கும் விடயம் ஒன்றில் ஏமாற்றம் அடைய நேரிடும்.

கடகம்: முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தோன்றும். பொறுமை வேண்டும்.

சிங்கம்: வாகனச் சொந்தக்காரர்களுக்கு இன்று அவதானம் வேண்டும்.

கன்னி; கல்வியில் ஈடுபடுவோர்க்கு விடாமுயற்சி வேண்டும்.

துலாம்: சத்துருவால் சஞ்சலப்படநேரும் அட்டவதானம் வேண்டும்.

விருச்சிகம்: குடும்பத்தில் குறைகேட்கநேரும். நிதானித்துநடக்கவும்.

தனுசு: காரியத்தாமதம் ஏற்படலாம் கவனம் வேண்டும்.

மகரம்: பெரியவர்களின் ஆசி தாராளமாக கிடைக்கும்.

கும்பம்: தொழில் விடயத்தில் சுறுசுறுப்புக் குன்றும்.

மீனம்: இலாபகரமான காரியங்களை பின் போடவும்.

திருமலை
வே. ரவீந்திரன்


# வெளிநாடு பிரயாணம்

அமெரிக்கா, ஒல்லாந்து செல்வதற்கான சகல ஒழுங்குகளும்,
பிரான்ஸ், ஜெர்மனி, செல்வதற்கான சிறந்த வசதிகளும்,
குறைந்த செலவில் காலதாமதமின்றி செய்துகொடுக்கப்படும்.

செவ்வாய் முதல் வெள்ளி வரை
PRASAD REST,
11 - Upatissa Road,
BAMBALAPITIYA. PHONE: 587855

சனி, ஞாயிறு, திங்கள்
வ. நல்லையா,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

[2492]



# பொருட்காட்சியும் விற்பனவும்

## Y. W. C. A. School of Home Techniques

தையல், கைவேலை, கேக் icing ஆகியவை பொருட்காட்சிக்கு வைக்கப்படும்.

திகதி: 30, பங்குனி மாதம் 1985 (30-03-1985)
நேரம்: காலை 10 மணி — மாலை 3-30 மணி வரை
இடம்: றிம்மர் மண்டபம், வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

உட்பிரவேசம் - ரூபா 3/-

திருக்குடும்பக்கன்னியர்மடம், கோப்பாய் பாடசாலைகளும் இதில் பங்கு பற்றும்.

சிற்றுண்டிகள், குளிர்பானங்கள் விற்பனைக்குண்டு.

2478



# SCIENCE ACADEMY

310, Clock Tower Rd,
JAFFNA

வினா/விடை வகுப்புக்கள்

ஆரம்பம்: 31-3-85

சனி-ஞாயிறு மட்டும்

| | | |
|---|---|---|
| 7-30 | தாவரவியல் | சர்வா |
| 8-30 | விலங்கியல் | தம்பிராசா |
| 9 30 | பௌதிகவியல் | மணியம் |
| 10 30 | இரசாயனம் | சத்தீஸ் |
| 11-30 | தாவரவியல் | பாலா |
| 12-30 | பௌதிகவியல் | சிறி |

நாடு திரும்பியுள்ள பிரபல
ஸ்கந்தா மணியம்
அவர்கள்

31-3-85 தொடக்கம் மேற்படி ஸ்தாபனத்தில் மின்னியல், சடப்பொருளியல், வெப்பவியல் பகுதிகள் ஆரம்பிக்கின்றார்.

நிர்வாகி



# PAPER CLASS

பிரிவு I

ஆரம்பம்: 30-03-1985
சனிக்கிழமை காலை 7-30 மணி

7-30 — 8-30 பௌதிகவியல் — Mr. VARNAM
8-30 — 9-30 இரசாயனவியல் — Mr. THILLAINATHAN
9-30 — 10-30 தாவரவியல் — Mr. KUGATHARAN
10-30— 11-30 விலங்கியல் — Mr. NAGANATHAN

பிரிவு II

விரைவில் ஆரம்பமாகின்றது.

11-30 — 12-30 — பௌதிகவியல்
12-30 — 1-30 — இரசாயனவியல்
1-30 — 2 30 — தாவரவியல்
2-30 — 3 30 — விலங்கியல்

விபரங்கட்கு:

NEW MASTER INSTITUTE
B M C LANE, JAFFNA.

குளியாப்பிட்டியாவில் விஜயகுமாரணதுங்க

# உமா, பிரபா தெற்கில் வீடுகளைக்கொளுத்தவில்லை!

(கொழும்பு)

''தென்பகுதியில் பயங்கரவாதம் பொதுத் தேர்தல் நடந்து அடுத்த மாதமான 77 ஜூலை 22ல் காணப்பட்டது. உமாமகேஸ்வரனோ அல்லது பிரபாகரனோ தெற்கிலுள்ள சிங்கள பௌத்தர்களின் வீடுகளுக்கு தீயிட்டுக் கொள்ளையடிக்கவில்லை ஆனால் யூ.என் பி குண்டர்களே இவற்றைச் செய்தனர்''

குளியாப்பிட்டி நகர சபை மண்டபத்தில் நடந்த ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி பிரசாரக் கூட்டத்தில், கட்சிப் பொதுச் செயலாளர் திரு. விஜயகுமாரணதுங்க மேற்கண்டவாறு கூறினார்,

அவர் மேலும் கூறியதாவது: ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தன வடக்கில் பயங்கரவாதம் பற்றி அடிக்கடி பேசிவருகின்றார்; ஆனால் அவர் தெற்கில் பயங்கரவாதம் பற்றி ஒரு வார்த்தைகூட பேசுவதில்லை. வடக்கிலும், தெற்கிலும் பயங்கரவாதம் என்பது ஜனாதிபதியால் உருவாக்கப்பட்டதொன்றாகும்.

யூ.என் பி ஆட்சி வந்து ஒரு மாத காலத்திற்குள் இனக் கலவரம் ஆரம்பமானது. அப்போது பிரதமராக இருந்த திரு. ஜெயவர்த்தன பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எந்த நடவடிக்கையையும் எடுக்க முயற்சிக்கவில்லை. ஆனால் அவர் எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றினார்.

திரு. சிறில் மத்தியூவின் தலைமையிலான யூ.என்.பி குண்டர்களே ஆசியாவில் மிகப் பெரிய நூல்நிலையமான யாழ் பொதுசன நூல் நிலையத்திற்கு தீயிட்டுக் கொழுத்தினார்கள்.

பௌத்த பிக்குவின் கோவிலைச் சுற்றி முள்கம்பி வேலி போடுமாறு திரு அமிர்தலிங்கம் உத்தரவிடவில்லை. தர்மிஷ்ட தலைவர் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனதான் அதனைச் செய்வித்தார்.

சிங்கள பால மண்டலயவின் கூட்டங்களை யார் தடை செய் செய்தார்கள். பேராசிரியர்களையும் பௌத்த தலைவர்களையும் யார் தாக்கினார்கள். உமா மகேஸ்வரன் தாக்கினாரா? அல்லது பிரபாகரன் தாக்கினாரா? இல்லவே இல்லை, சிறில் மத்தியூ தலைமையிலான யூ. என். பி குண்டர்களே இவற்றைச் செய்தார்கள்.

## நவாலி பாடசாலை உண்மைச் சம்பவம்

(யாழ்ப்பாணம்

நவாலி பாடசாலை சம்பந்தமாக நவாலி முருகமூர்த்தி கோவில் பரிபாலனசபையால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

''இப்பாடசாலையின் தலைமை ஆசிரியர் போலிக் குற்றச்சாட்டின் பேரில் இப்பாடசாலையில் இருந்து ஒரு திடீர் இடமாற்றத்தைப் பெற்றார். இதனை ஆட்சேபித்து அங்கு கல்வி பயிலும் சைவ மாணவர்கள் அவரின் மாற்றத்தை இரத்துச் செய்யவேண்டுமென்று கோரி பாடசாலைக்குச் செல்லாது பெற்றோரின் அனுசரணையுடன் பகிஷ்கரித்தார்கள். கல்வி இலாகாவிற்கும் இப்பகிஷ்பரிப்புப் பற்றி உடனடியாக அறிவிக்கப்பட்டு (28-4-85) முதலாந் தவணை முடியும்வரை மாற்றம் ஒத்தி வைக்கப்பட்டது. எனவே தலைமை ஆசிரியர் அப்பாடசாலைக்கு மீண்டும் கடமையாற்றவந்த போது அலுவலகத்திற்குள் வைத்து ஒருசிலரால் மீண்டும் தாக்கப்பட்டார்.

## அங்குரார்ப்பணக் கூட்டம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கிராம சேவை அலுவலர் பிரிவில் தேசியவைத்திய முறைகளை அபிவிருத்தி செய்வதற்கும், பாதுகாப்பதற்கும் ஆயுள்வேத பாதுகாப்பு சபையொன்றை ஆரம்பிப்பதற்கான அங்குரார்ப்பணப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் சில்லாலை கிராமஅபிவிருத்தி சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## கொடியேற்று வைபவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்குஅருள் மிகு நாகபூஷனி அம்பாள் ஆலய கொடியேற்று வைபவம் நேற்று முன் தினம் நண்பகல் நடைபெற்றது.

தொடர்ந்து பத்துத்தினங்கள் விசேட அபிஷேகமும், பூசைகளும் நடைபெறவுள்ளன. அடுத்த மாதம் 3ம் திகதி காலை தேர்த்திருவிழாவும், 4ம் திகதிகாலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

# 'மக்கள் மன்றங்களிலே விசாரிக்கப்பட வேண்டும்!'

[யாழ்ப்பாணம்]

மக்கள் விடுதலையை இராணுவ தர்பார் ஊடாக வென்றெடுக்க முடியாது'' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட சுவரொட்டி யாழ். பல்கலைக்கழக மதில் சுவரில் ஒட்டப்பட்டுள்ளது.

''மக்கள் விடுதலையாளர்களின் விசாரணைகள் மக்கள் மன்றங்களிலேயே விசாரிக்கப்படவேண்டும்; மக்களுக்கும் போராளிகளுக்கும் எதிராக துப்பாக்கி ஏந்துவதை உடனடியாக நிறுத்து!

''மக்களை ஏமாற்றும் பிற்போக்குவாதிகளே உங்கள் விடுதலை எங்களுக்குத் தேவையில்லை.''

''பதவி வெறி பிடித்தவர்களே அப்பாவித் தமிழர்களை கொலைசெய்வதை உடனே நிறுத்து!

''விடுதலை என்ற போர்வையில் இளைஞர்களையும், யுவதிகளையும் மோசம்செய்யாதே!''

## தீ மிதிப்பு

(யாழ்ப்பாணம்)

அராலி வடக்கைச் சேர்ந்த குலனையூர் ஞானவைரவர் ஆலயத்தில் 29ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8-30 மணியளவில் தீக்குள் இறங்கும் நிகழ்ச்சி இடம்பெறும்.

## கல்வாரிக்கெபியில் திருப்பலி

[யாழ்பபாணம்]

யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் தவக்காலத்தின் 6-ம் வெள்ளிக்கிழமையை முன்னிட்டு ஆண்டுதோறும் கல்வாரிக்கெபியில் இடம்பெறும் திருவழிபாடுகள் சூழ்நிலை காரணமாக அமைதியான முறையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

திருப்பலி காலை 6-00 மணிக்கும், மாலை 4-30 மணிக்கும் கல்வாரிக்கெபியில் நடைபெறும். கல்லறை ஆண்டவர் திருச்சுரூபம் இம்முறை ஆலயத்திற்கு வெளியில் கொண்டு வரப்படமாட்டாது என்றும், பக்தர்களின் ஆராதனைக்காக ஆலய பீட முன்றலில் நாள் முழுவதும் வைக்கப்பட்டிருக்குமென்றும் பங்குத் தந்தையான பிதா ஈ. ஜே. அருமைநாயகம் தெரிவித்தார்.

## விசேட உணவு முத்திரை

(ஊர்காவற்றுறை)

விசேட உணவு முத்திரை தேவையானவர்கள் சமூக சேவைப் பகுதிஉதவி ஆணையாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

இது பற்றி ஊர்காவற்று உதவி அரசாங்க அதிபர் தெரிவிப்பதாவது:

''மார்ச் மாதம் 5ம் திகதிக்குப்பின் விசேட உணவு முத்திரை தொடர்பாக எதுவித மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இவ்விசேட உணவுமுத்திரையானது ஜனவரி 1-ம் திகதியிலருந்து அதற்கான குடியிருப்பாளர் அட்டவணைகள் சமர்ப்பித்தவர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டன. மேலும், அப்பட்டியலின்படி நிவாரணப் பொருட்கள் சமூக சேவைப் பகுதி உதவி ஆணையாளரின்சிபாரிசின்படி வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதைவிட வேறுஎந்த நபருக்கும் உதவி தேவைப்படின் உதவி ஆணையாளர், சமூக சேவைப்பகுதி, கச்சேரி யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

# 'பாஸ்போர்ட்' பெறுவது எப்படி?

[சுண்டுக்குளி நிருபர்

இலங்கை கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் ஒருவர் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் விண்ணப்பகாரர்களுக்கு விடுக்கப்பட்ட அறிவுரையில் கேட்கப்பட்டுள்ளது.

இதற்கு வேண்டிய விண்ணப்பப்படிவம் (போம் K) 'கே' செம்மையாக நிரப்பப்பட வேண்டும்.

○ மூன்று பிரதிப்படங்கள் [2 ¾ X 2 '] அளவானவை இணைக்கப்படவேண்டும். இவற்றின் பின்புறத்தில் கடவுச் சீட்டு விண்ணப்பத்தில் மூன்றும் பக்கத்தில் விண்ணப்பத்தில் உறுதிப்படுத்துபவரே உறுதிப்படுத்த வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தில் மூன்றும் பக்கத்தில் இலங்கை அரசாங்க சிவில் நிரல் உத்தியோகத்தர், சமாதான நீதவான், தகைமை பெற்ற மருத்துவ உத்தியோகத்தர்கள் சட்டத்தரணி இவர்களில் யாரேனும் ஒருவர் உறிதிப்படுத்த வேண்டும்.

○ இரண்டாம் பக்கத்தில் குறிப்பிடப்பட்ட கூண்டில் ரூ. 200 க்குரிய முத்திரை ஒட்டப்பட்டு விண்ணப்பதாரரால் அதற்கு மேல் கையொப்பமிடல் வேண்டும்.

இரண்டு மாதிரிக் கையொப்பம் மூன்றும் 'பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கூண்டுக்குள் இடப்படவேண்டும்.

○ சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்:-

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம். (மூலப் பதிவுப் பத்திரம் திருப்பிப்பெற வேண்டுமாயின் அதன் போட்டோஸ்ரற் பிரதி) 16 வயதிற்கு மேற்பட்டவருடைய தேசிய அடையாள அட்டை (அதன் போட்டோஸ்ரற் பிரதியுடன்)

○ ஒருவர் பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரசையாய் இருந்தால் குடியுரிமைச் சான்றிதழ் (அதன் போட்டோஸ்ரற் பிரதி)

○ கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் (ஜி.ஏ எம் 3) இணைக்கப்பட வேண்டும். நற்சான்றிதழில் அந்தந்தப்பகுதி உதவி அரசாங்க அதிபரினால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்)

○ விண்ணப்பகாரரின் விலாசம் அழுதப்பட்ட தபாலுறை [8'' × 5'' அளவானது ] யுடன் 6 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும்.

○ திருமணமான பெண்களாயின் திருமணச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் தமிழில் இருந்தால் அதன் மொழி பெயர்ப்பும் [ஆங்கிலத்தில்) இணைக்கப்பட வேண்டும்.

[8-ம் பக்கம் பார்க்க]

# கச்சதீவும் பறிபோகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது!

## பாராளுமன்றத்தில் லக்ஷ்மன்

[கொழும்பு]

இன்று இலங்கையில் இடம் பெறும் யுத்தத்திற்கு நாள் ஒன்றுக்கு ஒரு கோடி செலவிடப்படுகிறது என்றும் விரைவில் ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு கோடி ரூபா செலவிட வேண்டிஏற்படும்என்றும் கூறப்படுகிறது.

இவ்வாறு அத்தனகல எம். பி. திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி பாராளுமன்றத்தில் கூறினார்

அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணைமீது பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

இன்று வடக்கு-கிழக்கு இராணுவத்தினருக்குத் தேவையான உணவுப் பொருட்கள் கூட விமானத்திலேயே கொண்டு செல்லப்படுகின்றன. இராணுவத்தினரும் விமான மூலமே சென்றுவிடுகின்றனர். ஆனையிறவுக்கு அப்பால் இராணுவத்தினர் போவதாகஇருந்தால் 10க்கு மேற்பட்ட வாகனங்களில் பலத்த பாதுகாப்புடனேயே போகவேண்டியுள்ளது.

எமது எல்லைகளை நாம் பாதுகாக்காவிடின்எல்லைகள்எம்மை வந்துசேரும் என ஜனாதிபதி பாராளுமன்றத்தில் கூறியிருக்கின்றார். ஆம் இன்று எல்லைகள் எம்மைவந்துசேருகின்றன. கடல் எல்லையும் எம்மை வந்து சேருகின்றது. கச்சதீவும், பறிபோகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. மதவாச்சிக்கு அப்பால் செல்லமுடியுமா? இராணுவத்தினர்கூட பயப்படுகின்றனர்.

வடபகுதி கடலில்வைத்து ஹெலிகொப்டர் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதாக தீவிரவாதிகள் கூறுகின்றனர். அதபற்றி என்ன கூறுகின்றீர்கள்? ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தப்படவில்லையா?

சுகாதார அமைச்சர்: எமக்குக் கிடைத்த தகவல்களின் படி ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தபபடவில்லை. சுட்டதில் சிறு காயம் ஏற்பட்டது.

லக்ஷ்மன்: உங்களுக்குக் கிடைத்த தகவல்கள் அப்படியா?

திருமலையில் சர்வதேச விமான நிலையத்தை நிறுவுவதற்கு அமெரிக்க நிறுவனம் ஒன்று ஆலோசனையையும் திட்டத்தையும் தயாரிக்க உள்ளது. திருமலையில் அமைக்க வேண்டுடியஇடத்தை தெரிவு செய்ததும் அந்த கம்பனி தானே என்பது முக்கிய விடயம்.

## மானிப்பாய் கல்வி வட்டார அதிபர்கள் ஆராய்வர்

(மானிப்பாய்)

மானிப்பாய்கல்விவட்டாரத்திற்கான அதிபர்கள் கூட்டம் வரும் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் மானிப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு.ச தனஞ்செயன் தலைமையில் நடைபெறவிருக்கிறது

இக்கூட்டத்தில் அதிபர்கள் மேற்பார்வை அறிக்கைகள், செயற்திட்ட அறிக்கைகள், அறிவித்தலின்றிப் பாடசாலைக்கு வராமல் நிற்கும் ஆசிரியர்கள் விபரம், சம்பளமற்ற லீவில் நிற்கும் ஆசிரியர்கள் விபரம், சர்வதேச இளைஞர் ஆண்டு சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், மாணவர் தலைவர் செயற்திட்டங்கள், பாடசாலையில் நடந்த குறிப்பிடக்கூடிய விசேட நிகழ்ச்சிகள், தவணைப் பரீட்சைகள், ஆறும் வருட மாணவர்களுக்கான பரீட்சை, மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர் உதவிப்பணம் வழங்குவதற்குமான பரீட்சை போன்ற விஷயங்களும் ஏனைய விஷயங்களும் பரிசீலிக்கப்படவிருக்கின்றன.

### மணிவாக்கு

நோவற்க நொந்து அறியார்க்கு; மேவற்க
மேன்மை பகைவர் அகத்து

— குறள்

# நமது நோக்கு

## யாழ்நகர் வணிகரின் வெற்றி

'உண்மைதான் லாபமும் தரும் யுக்தி' என்று ஆங்கிலத்தில் ஒரு பழைய வாசகம் உண்டு.

இக்காலத்தில் வாணிகம் செய்வோர்- கொள்ளை இலாபம் அடிப்பவர்கள், மக்கள் துன்பங்களில் செல்வம் திரட்டுபவர்கள், பதுக்கல், கள்ளக்கடத்தல் போன்ற சமூக விரோதச் செயல்களில்ஈடுபடுபவர்கள் என்ற பலவிதமான பழிக்கு ஆளாகின்றனர்.

இந்தக்கருத்து எம்மத்தியில் நிலவுவதற்கு ஆதாரமில்லாமற் போகவில்லை.

இன்றைய கட்டுப்பாடற்ற பொருளாதாரத்தில் நேர்மை தவறிபொருள் தேட பல வாய்ப்புக்கள் உண்டு, அவற்றைப் பயன்படுத்திபெருஞ்செல்வராகும் வர்த்தகர்கள் அப்பொருள் நல்ல பலனளிக்குமென்று எதிர்பார்ப்பது மடமை.

பிறருடைய லாபநட்டத்தைத் தங்களுடைய லாபநட்டம் போலவே கவனித்து வாணிபத்தொழில் செய்வதே நல்ல பயன்தரும் வாணிப முறை ஆகும்.

"நேர்மையாக வாழ்ந்தாயானல் நீ சம்பாதித்த சொத்துபழியோடு கலவாமல் உன்மக்களுக்குப்போய்ச் சேரும். நேர்மையாக நீ வாழ்ந்தாயானல் உன்மக்களும் அதைப்பின் பற்றுவார்கள். வியாபாரத்தில் நேர்மை தவறி நடக்கலாம் என்பது தவறு''.

இவ்வாறு சுமார் 2000 வருடங்களுக்கு முன்னரே திருவள்ளுவ நாயனுர் தமது குறளில் விளக்கியிருக்கிறுர்.

இது பழைய ஏற்பாடாக இருந்தால் புதிய ஏற்பாட்டை யாழ்ப்பாணம் பெரிய கடையில் வரலாற்று ரீதியில் பார்க்கலாம். எத்தனை மாற்றங்களை நாம் கண்டபோதும் நேர்மையாக, நிதானமாக வணிகஞ் செய்த பரம்பரை செல்வத்துடனும் சீருடனும்வாழ்ந்து வருகின்றது. இத்தகைய வணிகத்துக்கு சோஷலிஸம் எவ்வகையிலும் முரண்படாது.

இதற்கொரு நல்ல சான்ருக அமைந்ததே இன்று யாழ் மாநகர வர்த்தகர் சங்கம் விடுத்திருக்கும் அறிக்கை. பிரபல வர்த்தகர் சிலர்கடத்தப்பட்டபோதும் அவர்கள் விடுதலை செய்யப்பட்ட செய்தி நாம் குறிப்பிடும் பண்புக்கு ஒரு எடுத்துக்காட்டாகின்றது. பொது மக்கள் அபிப்பிராயத்தை உருவாக்கும் திறமை நாணயமுடைய வர்த்தக சமூகத்துக்கு என்றும் உண்டு.

இன்று யாழ். நகரில் மட்டுமல்ல தமிழ் மக்கள் மத்தயில் மட்டுமல்ல. நாட்டில் பல பாகங்களிலும், உலகில் பல நாடுகளிலும் பயங்கரவாதம், கெரிலா யுத்தம், உள்நாட்டுப்போர், கொலை கொள்ளை ஆள் சடத்தில் போன்ற பல்வேறு கொடுமைகள் காணப்படுகின்றன.

இவற்றையெல்லாம் ஒன்றுபடுத்தி, பொதுவாக இதனைப் பயங்கரவாதமென்றும் இதனை ஒழிக்க மக்கள் முன்வரவேண்டுமென்றும் கோஷம் எழுப்பப்படுகின்றது.

'கும்பலில் கோவிந்தா' என்பதுபோல தன்னுடைய நாட்டைப் பாதுகாக்க போர்க்களத்தில் உயிர்துறக்கும் யுத்த வீரனும் எதிரியை இனங்கண்டு முறியடிககும் திறமையின்றி அப்பாவி அயலவனைக் கொல்லும் கோழையும் ஒரேதன்மையரென்று கொள்வது நியாயமா?

அதேபோல் தக்கவிளக்கமின்றி தம்முடைய இனத்தவர் தவருக நடந்துவிட்டாரென்று தண்டிக்க எடுத்த எத்தனம் கைவிடப்பட்டதில் அதிசயம் ஒன்றுமில்லை. இவ்வித தவறுகளை பயன்படுத்த தோல்வி கண்ட கூட்டம் ஒன்று தயாராகவிருக்கிறது.

வர்த்தகருக்குரித்தான பண்பு உடையவர்கள் சமூகத்தின் பாதுகாவலர்கள் "நான்லோகோபகாரி, இவ்வளவு கொடுத்தேன் அவ்வளவுகொடுத்தேன்'' என்று தம்மை விளம்பரப்படுத்தி பெருமைப்படுத்தும் பேர்வழிகள் அல்லர்.''

இந்த உண்மையை நிலை நாட்ட எடுத்த நடவடிக்கைக்கு யாழ். மாநகர வர்த்தக சங்கம் பாராட்டுக்குரியது.

இது பெரிய விடயத்தில் ஒரு அம்சமென்ருல், மற்றது இதிலும் மிக முக்கியமானது.

இன்று யாழ்ப்பாணம் மட்டுமல்ல தமிழ் மக்கள் வதியும் எப்பகுதியிலும் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை அறியாதார் இந் நாட்டில் எவருமுண்டா?

இருக்கலாம், ஆனல் நாகரிக நாடுகள் வேறெங்கிலும் எவருமில்லையென்று அடித்துக் கூறலாம்.

இன்றும் இத்தகைய மக்கள் உண்டென்ற நம்பிக்கையில் போரில் வெல்ல முடியாத நிலையில் துண்டுப்பிரசுரங்கள் உதவுமென்ற சூழ்ச்சி ஆரம்பமாகிறது.

இதற்கு பலியாகும் ஒற்றுமையினம் எம்மத்தியில் இன்று இல்லையென்பதை யாழ். நகர வர்த்தகப் பெருமக்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

இன்னும் எத்தனை ராஜ அராஜக தந்திரங்கள் வரவிருக்கின்றனவோ நாமறியோம்.

சூடுகண்ட பூனைகள் புலியாகுமளவிற்கு துன்பம் அதிகரித்தது. எனவே பசித்தாலும் அவை புல்லைத் தின்னும் நிர்ப்பந்தம் நியாயமாகாது, அதர்மமுங் கூட,

[நேற்றைய தொடர்ச்சி]

"அரசாங்கதின் ஆணிவேராக தொண்டமான் இருக்கிறுர் அரசிலிருந்து கொண்டே அவர் தாம் நினைத்தபடி நடக்கிறுர்.''

"பாதுகாப்பு நிதிக்குபணம் கொடுக்க வேண்டாம் என தோட்டத் தொழிலாளர்களையும் ஆசிரியர்களையும் தொண்டமான் கேட்டுள்ளார்.''

தொண்டமான் பற்றிய லக்ஷ்மன் ஜயக்கொடியின்விமர்சனங்களே இவை

### சிங்கள மக்கள் குடியேற்றம்

வடக்கில் 2 லட்சம் சிங்கள மக்களைக் குடியேற்ற வேண்டும் என்கிறது அரசு. அங்கு சிங்களவர்களைக் குடியேற்றக் கூடாது என்று அதே அரசில் இருக்கும் அமைச்சர் தொண்டமான் மறுக்கிறுர். இதில் எது சரி என வினவினுர் மகரகம தினேஷ் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் தொண்டமானுக்கு விரைவில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர இருக்கிறேம். அப்போது விபரமாக பேசுகின்றன் எனினும் சில விடயங்களை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வடக்கில் சிங்களவர்களைக் குடியேற்றும் திட்டம் என்ன எதிர்ப்பு வந்தாலும் கைவிடப்படமாட்டாது எனதேசிய பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.

ஆனல் அமைச்சர் தொண்டமானே- "சிங்கள குடியேற்றத்தை எதிர்க்கிறுர், தமிழ் மக்கள் இங்கிருந்து அகதிகளாக வெளியேறக் கூடாது இங்கிருந்து கொண்டே தமது உரிமைகளுக்கு எதிராக போராட வேண்டும். தமிழ் இனத்தை அழித்து சிங்கள இனத்தை குடியேற்ற முயலும் தீய சிங்களவரின் எண்ணத்தை முறியடிக்கவேண்டும். இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்வது தமிழ் மக்களின் சனத்தொகையைக் சில பிரதேசங்களில் குறைக்க விரும்பும் சிங்களவர்களுக்கு உறுதுணையாகவே அமையும்'' என்று பத்திரிகைகளுக்கு கூறியிருக்கிறுர்.

அவரின் இக் கூற்று போராட்டம் நடாத்தி வரும் தமிழ் இளைஞர்களுக்கு மேலும் ஆயுதங்களை எடுத்து அரசுக்கு எதிராக தீவிரமாக போராடுமாறு அழைப்பு விடுப்பது போல் உள்ளது.

அனுராவின் சமர்ப்பணம் இது. அச்சமயத்தில் தொண்டமான் சபையில் இருக்கவில்லை. அவருக்காக எழுந்து வாதாடுகிறுர் ராஜாங்க அமைச்சர்.

தொண்டமானுக்கு தமது மக்களின் உரிமைகளுக்காக பாதுகாப்புக் குரல் கொடுக்க உரிமை உண்டு. அவரும் அவரது இயக்கமும் பயங்கரவாதத்தையும் பிரிவினையையும் எதிர்ப்பதாக பல தடவைகள் கூறிவிட்டனர். எனவே அவரது கௌரவம் பாதிப்புறும் வகையில் பேசுவது அரசியல் அனுகரிகம்

தொண்டமானில் தொட்ட அனுரா அமிர்தலிங்கத்திடம் வருகிறுர்- இந்தியா இலங்கை மீது ஆக்கிரமிப்பு நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்த அமிர்தலிங்கத்தின் மீதோ தமிழர் விடுதலைக் கூட்டணி மீதோ எதுவித நடவடிக்கையும் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான டாக்டர் அல்விஸ் பத்திரிகையாளரிடம் கூறிய ஓரிரு தினங்களின் பின்னரும் அமிர்தலிங்கம் இந்தியா இலங்யையை ஆக்கிரமிக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

அவ்வாறு இருந்தும் அமிர்தலிங்கத்தின் மீதோ தொண்டமான் மீதோ எதுவித நடவடிக்கையும் இல்லை, இவர்கள் மீது நடவடிக்கை எடுகக அரசு ஏன் தயங்குகிறது என்பதுதான் புரியவில்லை.

பாராளுமன்றத்திலிருந்து ———— நமது நி...

## அமெரிக்காவுக்கு காணி வழங்கியதா...

# இந்தியா ஆத்திரம்

# 'சரத்' தகவல்

வழமையாக சிறப்புப் பயனுள்ள காலத்திற்கேற்ற பயனுள்ள உரைகளை நிகத்திவரும் கம்யூனிஸ்ட் சரத்திற்கு ஒரு சந்தேகம் தமது சந்தேகத்தை தீர்த்துக் கொள்ள அவர் தொடுத்த வினு பதிலின்றியே மறைந்து விட்டது. வினு இதுதான்

### மதவாச்சி பொலிஸ் நிலைய தாக்குதல்

மதவாச்சி பொலிஸ் நிலைய தாக்குதலுக்கு 2 வாரங்களுக்கு முன் அங்கு வேறு முக்கிய சம்பவம் இடம் பெற்றதா?அதற்கு யார் பொறுப்பு? எவரின் உயிருக்காபத்து ஏற்பட்டதா?

எமது நாட்டின் வளம் வெளிநாட்டிவருக்கு தாரை வார்க்கப்படுகிறது! அதனை உமாமகேஸ்வரனே பிரபாகரனே கொடுக்கவில்லை அரசாங்கமே எமது வளங்களை பல்தேசிய கம்பனிக்ளுக்கு கொடுத்துள்ளது.

அமெரிக்க குரலுக்கு (Voice Of America) 1000 ஏக்கரை கொடுத்தமையினுல் இந்தியாவில் இலங்கைக்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. உமாவோ, பிரபாவோ இதனைக் கொடுக்கவில்லை.

ஈழம் வந்தால் நாட்டின் ஒரு பக்கம்தான் போகும் இப்போது நாட்டின் பல்வேறு பகுதிகள் வெளிநாட்டினருக்குப் போகின்றன.

### 'சரத்' கிண்டல்

இவ்வாறு தொடர்ந்து சென்ற சரத் இறுதியில் கிண்டல் ஒன்றையும் நாசூக்காக உதிர்த்தார்.

இம்மாத இறுதியில் பாகிஸ்தானுக்குச் செல்லும் ஜனதிபதி பாகிஸ்தான் ஜனுதிபதியிடமும் அடுத்த மாதம் இங்கு வரும் மார்கிரெட் தட்சரிடமும் ரியூஷன் எடுக் எடுக்கப் போகிறர் போலும்.

தமிழ் தீவிரவாதிகள் கெரிலாக்களா? கொள்ளைக்காரர்களா? என்பதற்கு வியாகியானம் கொடுத்தார் அனில் முனசிங்கா.

தமிழ் தீவிரவாதிகளை கொள்ளையர்கள் பயங்கரவாதிகள் என்று கூறுகிறுர்கள் ஆனல் அவர்கள் தாக்கிவிட்டு ஒடி ஒளியும் தந்திரத்தை கடைப்பிடித்தாலும் அவர்கள் கெரிலாக்கள் தான் ஓரிடத்தில் அவர்கள் மீது தாக்குதல்நடத்தினுல் வேறு இடங்களுக்கு சென்று மறைந்து கொள்கிறுர்கள் கம்யூச்சியா கெரிலாக்களும் இபபடித் தானே தபது இடத்தை மாற்றிக் கொள்கிறுர்கள்.

அனில் தொடர்கிறுர்—

இராணுவத்தின் பலம் அதிகரித்திருக்கிறது அவர்கள் முன்னேறியிநக்கிறுர்கள் என அமைச்சர் கூறுகிறுர் ஏற்றுக் கொள்கிறேம். ஆனல் மதவாச்சிவரை வந்துவிட்ட தீவிரவாதிகளும் முன்னேற்றம் அடையவில்லையா?

'ஈழத்தின் குரல்' வானெலியை இன்று சிங்கள மக்களும் கேட்கிறுர்கள். அதனை 'டேப்'புகளில் பதிவுசெயது கேட்கமுடியாத நண்பர்களுக்கும் கொடுக்கிறுர்கள். அந்த ஒலிபரப்பில் தெரிவிக்கப்படும் கருத்துக்களில் நியாயம் இருப்பதாகவும் பலர் எண்ணுகின்றனர்.

இவ்வாறு கூறிய அனில் முனசிங்கா ஜே. வி. பி. 'வாசுதேவா மீது நடவடிக்கை எடுக்கும் அரசு ஈழம் கோரும் அமிர்தலிங்கத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தயங்குவது ஏன் என்ற கோஷத்தையும் எழுப்பத் தவறவில்லை.

அவசரகால நீடிப்பு நாடகத்தின் நாயகனை லலித் கருத்து நிறைந்த உரையை நிகழ்த்தியதுடன் சுதந்திரக் கட்சியை சாடவும் மறக்கவில்லை.

வடக்கில் சில சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் இராணுவம் மிகவும் பலத்துடனேயே இருக்கின்றது போதிய ஆயுதங்கள் இருக்கின்றன பல இடங்களில் குறிப்பாக கிழக்கில் எமது இராணுவத்தினர் பயங்கரவாத நடவடிககைகளை முறியடித்துள்ளனர்.

குமுணவில் பயங்காவாதிகளின் தாக்குதல் ஒன்று முறியடிக்கபபட்ட போது பலர் கொல்லப்பட்டதுடன் வேறு பலர் கைது செய்யப்பட்டனர்.

நாம் பழைய ஆயுதங்களை வாங்குவதில்லை. அவசியம் ஏற்பட்டதால் முன்பு வாங்கினேம் இப்போது எமக்காக செய்யப்பட்ட புதிய ஆயுதங்களையே கொள்வனவு செய்கி...

றேம்—தினேஷின் கே...
இது பதிலாக இருந்த...
லலித் தொடர்கிறுர்...
யுத்த நிறுத்தத்தை...
பிடிக்க நாம் என்று...
ராக இருக்கிறேம். யு...
ஆரம்பித்தவர்களே தீ...
கள்தான். அவர்கள...
லில் யுத்தத்தை...
வேண்டும்.


இராணுவத் தீர்வில்...
நம்பிக்கையில்லை. அ...
லாமல் உயிர்கள் அழி...
வதை நாம் விரும்ப...
பேச்சுவார்த்தைகள்...
பேச்சு நடத்தவே நாம்...
புகிறேம்—முயலுகிறே...
வாதிகள்தான் இரா...
தீர்வை நாடுகிறுர்கள்.

இன்றுகூட தீவிர...
எம்மீது தாக்குதல்...
னுல் 71-ல் கிளர்ச்சி...
ளுக்கு ஏற்பட்ட கதி...
களிக்கும் ஏற்படும்.

சுதந்திரக் கட்சியை...
றுர் லலித்—

முறிகண்டி ரயில்...
வெடிப்பு சம்பவத்தி...
இராணுவ வீரர்கள்...
லப்பட்டதாக சுதந்தி...
கூட்டத்தில் கூறப்ப...
உண்மையில் அங்கு...
இராணுவ சிப்பாய்...
11 பொதுமக்களுமே...
லப்பட்டனர் இவர்களி...
கூற்றை பயங்கர வா...
கூறியிருந்தனர்.

தவக்காலத்தின்



### 37-ம் நாள்

"ஆன்ம வாழ்வுக்கு உயிர் தந்தருள்வார் அறநெறி தனிலே ஒழுகச் செய்வார்,''

—சங்கீதம் 23

வாழ்விழந்த மக்களுக்கு தன் வாழ்வினையும் வாழ்க்கையின் அர்த்தம் புரியாமல் தத்தளித்துத் திரியும் ஆட்களுக்கு வாழ்வின் பொருளையும் அழித்திட வல்லவர் இறைவனே. "இறைவா உம் இரக்கத்திற்கேற்ப என்மீது இரக்கம் வையும். உம் இரக்கப்பெருக்கத்திற்கேற்ப என் குற்றங்களை மன்னியும். நான்செய்த குற்றத்தை என்னிடமிருந்து முற்றிலும் கழுவிப் போக்கிவிடும். என் பாவத்தைக் கழுவி என்னைத் தூய்மைப் படுத்தும்'' என்று தாவீது அரசர் தனது தவறினை ஏற்று இறைவனிடம் திருந்திய உள்ளத்தோடு திரும்பி வருகிறுர்.

திக்குத் திசை உணர்வு தெரியாத செம்மறி ஆட்டினை நல்ல ஆயன் வழிநடத்திச் செல்வது போல உண்மையையும் நன்மைமையையும் முழுமையாக பிரிந்துகொள்ளாத என்னையும் நன்னெறிதனிலே நடத்திச் செல்கின்றுர். என் குறைகளோடும் நிறைகளோடும் என் பலவீனங்களோடும் திறமைகளோடும் என்னை அவர் நானுக ஏற்றுக்கொள்கின்றுர்.

"இங்கு நான் வந்திருப்பது என்னைக் கண்டுபிடிக்க. ஏனெனில், உலகில் இலகுவாய் என்னை இழந்து விடலாம்'' என்று புளோறிற்றிலுள்ள பாடும் கோபுரத்தில் எழுதப்பட்டுள்ளது. எனவே, உலக மோசடிகளிலும் உலக மாயைகளிலும் என்னை இழந்து விடாமல் இறைவனை மையமாகக்கொண்ட வாழ்க்கையை என் சகோதர சகோதரிகளில் இறைவனை காண்கின்ற வாழ்க்கையினை நான் மேற்கொள்ள வேண்டியவனுய் உள்ளேன்.

வின்சென்ற் பற்றிக்
அ. ம. தி.

லங்கெம் வி...
காலமாக வி...
முதலிடம் பெ...
அவை இலங்...
அறுவடை ெ...
மாக பெருகிவ...
களிலிருந்து ...
காண்பது இல...
கருதுகிறேம்....
களின் செயர்...




விலை ரூ. 19.50 (பு...

## நமது நிருபர்

## ழங்கியதால்

றும்—திநேஷின் கேள்விக்கு து பதிலாக இருந்தது:
லலித் தொடர்கிறார்—
யுத்த நிறுத்தத்தை கடைப் டிக்க நாம் என்றுமே தயா க இருக்கிறோம். யுத்தத்தை ரம்பித்தவர்களே தீவிரவாதி ர்தான். அவர்களே முத ல் யுத்தத்தை நிறுத்த வண்டும்.

இராணுவத் தீர்வில் எமக்கு ம்பிக்கையில்லை. அர்த்தமில் மல் உயிர்கள் அழிக்கப்படு தை நாம் விரும்பவில்லை. ச்சுவார்த்தைகள் மூலம் ச்சு நடத்தவே நாம் விரும் றோம்—முயலுகிறோம் தீவிர திகள்தான் இராணுவத் வை நாடுகிறார்கள்.

இன்றுகூட தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தி ல் 71-ல் கிளர்ச்சிக்காரர்க க்கு ஏற்பட்ட கதியே அவர் க்கும் ஏற்படும்.

சுதந்திரக் கட்சியைச் சாடுகி லலித்—
றிகண்டி ரயில் குண்டு டிப்பு சம்பவத்தில் 292 ாணுவ வீரர்கள் கொல் பட்டதாக சுதந்திரக்கட்சி ட்டத்தில் கூறப்பட்டது. ன்னையில் அங்கு 28 ாணுவ சிப்பாய்களும் பொதுமக்களுமே கொல் பட்டனர் இவர்களின் இக் றை பயங்கர வாதிகளும் யிருந்தனர்.

வடக்கு கிழக்கில் அரசு நிர்வாகம் இல்லை என்கிறார்கள்.

இதுபோன்ற பேச்சுக்களால் பயங்கர வாதிகளே வெற்றியடைகிறார்கள் என மக்களை எண்ண வைக்கிறார்கள். இவர்கள் வாயைத் திறந்தால் அதுபயங்கர வாதிகளுக்கே லாபமாக அமைகிறது. இவ்வாறனவற்றைக் கூறி எமது மக்களின் ஒற்றுமையைக் குலைக்கப் பார்க்கிறார்கள் சுதந்திரக் கட்சியினரின் ஒவ்வொரு கூட்ட உரைகளையும் நான் கேட்டிருக்கிறேன் இக்கட்டத்தில் குறுக்கிட்ட சரத் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சர் சுதந்திரக்கட்சி கூட்டங்களில் பேசும் விஷயங்களிலேயே மிகவும் அக்கறையாக இருக்கிறார் என்றார் கிண்டலாக

''இன்றைய பிரச்னைக்கு என்றுமே தீர்வு கிடைக்காமலும் போகலாம்'' என அமைச்சர் காமினி திசநாயக்கா தமது உரையில் கூறிய வேளையில் எதிர்தரப்பிலிருந்து —

''என்ன ... என்ன ... என்றுமே தீர்வு கிடைக்காதா? என்று அதிர்ச்சியுடன் எதிர்தரப்பினர் பலரும் கேள்வி எழுப்பினர். தமது கூற்றுக்கு பின்வருமாறு விளக்கம் அளிக்கிறார் காமினி —

''என்றுமேதீர்வுகிடைக்காது என்று நான் கூறவில்லை. தீர்வு கிடைக்காமலும் போகலாம் (May be never solved) இந்த ஆண்டுக்குள்ளேயே தீர்வும் கிடைக்கலாம் (May be this year) என்று தான் கூறினேன்.

''நீண்டகாலமாக இருந்து வரும் ஐரிஸ் பிரச்னைக்கு எப்போது தீர்வு ஏற்படும்? என இங்கு வந்து இச்சபையில் உரை நிகழ்த்த இருக்கும் திருமதி மார்கிரட் தட்சரிடம் கேட்டுப் பாருங்கள். அவரால் தானும் எப்படி கூற முடியும்''.

இன்றைய பிரச்னையை பயங்கரவாதிகள் பிரச்னை என்கின்றனர் சிலர். பையன்கள் பிரச்னைகள் என்கின்றனர் சிலர். ஆனல் அதற்கு வடபகுதி பிரச்னை என்பதே பொருத்தம் என்றும் பெயர் சூட்டினார் காமினி.

யுத்தம் நடைபெறுகிறது — நிலைமை சீர்கெட்டுள்ளது என்று இருதரப்பினரும் வரிக்கு வரி கூறிவருகின்ற போதிலும் ஒருவரை ஒருவர் திட்டித் தீர்ப்பதில் எதுவிதத்திலுமே தாம் மற்றவர்களுக்கு சளைத்தவர்கள் அல்லர் என்பதை இருதரப்பினரும் காட்டத் தவறவில்லை.

## தட்டுப்பாடு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உத்தியோகபூர்வ கடிதத்தலைப் புத்தாள்களுக்கு பெரும்தட்டுப்பாடு நிலவுகிறது.

இவ்வலுவலகத்தில் கடந்த ஒருவருடத்திற்குமேலாக இந்த உத்தியோகபூர்வ கடிதத் தலைப்புத்தாள்கள் இல்லாமலிருப்பது குறிப்பிடத்தக்கது.

## "சமுதாயம் அமைதிபெற இளைஞர் சக்தி பயன்படவேண்டும்"

(மானிப்பாய்)

''இளைஞர்களின் சக்தி மகத்தானது. இந்த சக்திமிக நல்ல வழில் முறையாகப் பயன்படுத்தப்பட்டால் எதிர்கால சந்ததியினர்மிக்க பயனைப் பெறமுடியும். அத்துடன் சமுதாயமும் அமைதியானதொரு வாழ்வைப் பெறமுடியும்,

இவ்வாறு ஆனைக்கோட்டை ஜேமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைஅதிபர் திருமதி பா. கந்தசாமி சர்வதேச இளைஞர் ஆண்டு தொடர்பாக மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு தலைமை வகித்துப் பேசுகையில் எடுத்துக்கூறினார்.

அவர்மேலும் பேசுகையில் ஒழுங்குக்கட்டுப்பாடு இளைஞர்களுக்கு எப்போதுமே தேவையானதொன்று என்று குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் சிறப்புரை நிகழ்த்திய ஆசிரியை திருமதி சி.விஸ்வலிங்கம் தமது உரையில் இளைஞர்கள் ஆண்டு சர்வதேசரீதியில் இந்த வருடம் கொண்டாடப்படுவது இளைஞர்களுக்கு உலகம் கொடுத்துள்ள மிக்க மதிப்பினை நன்கு எடுத்துக் காட்டுவதாகவும் தமது பெருமதியினை இளைஞர் நன்குணர்ந்து அதற்கமைய நெறிமுறையில் வாழத் தலைப்பட்டால் தாமும் தம்மைச்சார்ந்தவர்களும் சிறப்பும் பெருமையும் அடையலாம் என்றும் கூறினார்.

ஆசிரியர் திரு.க. கணேசலிங்கம் பேசுகையில் இளைஞர்கள் பயனுள்ள வாழ்வை வாழ்வதால் அவர்களுக்கும் அவர்களைச்சார்ந்த சமுதாயத்துக்கும் தயது பெற்றோருக்கும் பெரும் உதவி புரிவதாக அமையும் எனக்குறிப்பிட்டார்.

மயணவி செல்வி ஜே. பிறிஜிட்டா பேசுகையில் இளைஞர்கள் நல்ல வழியில் இட்டுச் செல்லப்பட்டால் எதிர்காலத்தில் பெரியதும் நன்மை பயக்கத்தக்கதுமான காரியங்களை நிறைவேற்ற அவர்களால் முடியும் என்று குறிப்பிட்டார்.

[7ம் பக்கம் பார்க்க]

## ஹன்டி பேரின்பநாயகம் நினைவு

★ ★ ★

## அவர் சொன்னதும் நாடு மறந்ததும்

தேசவிடுதலை வேண்டுமென நின்ற
தேசிய வாதியாம் எங்கள் ஹன்டி
நேசமுடன் மக்கள் ஒன்றுபட்டால் - இங்கு
நீசவிளைவுகள் நேராதென்றா,
தூரதிருஷ்டியாய் (அவர்) சொன்னதெல்லாம் - அன்று
தூர ஒதுககிநாம் வைத்ததினால்
பேரம்பேசி எம் உரிமைகளை - இன்று
பேணும் நிலையன்றோ வந்துற்றது?
தேசம் விடுதலை பெற்றதுதான் - ஆனால்
தேசியம் தோற்று போனதுகாண்?
ஆசை அரசியலானதினால் - எல்லாம்
ஆணவத்தாண்டவமானதிங்கே! - பி. எஸ். பி.

லங்கெம் விவசாய இரசாயனங்கள நீண்ட காலமாக விலைக்கும். செயற்திறனுக்கும் முதலிடம் பெற்றவை.

அவை இலங்கை விவசாயிகள் அபரிமித அறுவடை பெற உதவுகின்றன. சமீபகாலமாக பெருகிவரும் இரசாயனத் தயாரிப்புகளிலிருந்து எமது தயாரிப்புகளை இனங்காண்பது இலகுவாகவேண்டும் என நாம் கருதுகிறோம். எனவேதான் எமது தயாரிப்புகளின் செயற்பாட்டுத்திறன் போலவே அவற்றின் லேபில்களும் தனித்துவமாகத் திகழ வேண்டுமென எண்ணி தனித்துவ தோற்றம் வழங்கியுள்ளோம். சரியான நோக்கில் எடுக்கப்பட்ட சரியான முடிவு இது! ஏனெனில் இப்போது லங்கெம் 100% இலங்கையருக்கே உரித்தான பொதுக் கம்பனியாகியிருக்கிறது. ஆம் அது உங்கள் கம்பனி.

லங்கெம் விவசாய இரசாயனங்களின் சில பெயர்களும், சகல லேபில்களும் மாற்றப்பட்டுப் புதுத்தோற்றம் பெற்றுள்ள போதிலும் தரத்தில் மாற்றமேதுமில்லை!

| புதிய பெயர் | பழைய பெயர் | புதிய பெயர் | பழைய பெயர் |
|---|---|---|---|
| டியல்றின் 20. | டியல்ட்ரெக்ஸ் 20 | கொலர் புரடெக்டன்ட் | ஷெல் கொலர் புரடெக்டன்ட |
| அல்ட்ரின் 20. | அல்ட்ரெக்ஸ் 25 | TB 192 பனல் டிரெஸ்ஸிங் | ஷெல் TB 192 |
| மொனோகுரோட்டபோஸ் 60% | அசோட்ரின் 60 | லங்கெம் DD | ஷெல் DD |
| மெதாமிடோபோஸ் 60 | மெதாமிடோ | சேர்பக்டன்ட் N | அக்ரிகல்சர் |
| | போஸ் LC 60% | | சேர்பக்டன்ட் N |
| லங்கெம் M-50 | களைநாசினி M 50 | லங்கெம் ப்ளவரிங் ஹார்மோன் | ஷெல்ஸ்டோன் P |
| லங்கெம் பரகுவாட் | பரகுவாட் | லங்கெம் சல்பர் | டிஸ்பேர்சிபிள் சல்பர் |
| லங்கெம் சினெப் | சினெப் | | |

நாடெங்குமுள்ள லங்கெம் வியாபாரிகளிடம் விரைவில் கிடைக்கும்.

LANKEM

# லங்கெம், புதுததோற்றம்.




விலை ரூ. 19.50 முதல்

லங்கெம். விவசாயிகளின் தோழன். லங்கெம் சிலோன் லிமிட்டெட், 760, 762 பேஸ்லைன் வீதி - கொழும்பு - 9. தொலைபேசி: 598292-6

## ✭ எழுத்தாளனுக்கு இப்படி ஒரு நிலை!

# சான்றிதழ் வந்தது; பரிசு கிடைக்கவில்லை!

(மானிப்பாய்)

பிரபல எழுத்தாளர் திரு. எஸ். அகஸ்தியரின் 1978, 1980-ம் ஆண்டுகளில் வெளிவந்த நாவல், ஆய்வுநூல் ஆகியவற்றுக்கான இரு சாகித்தியமண்டல இலக்கியப்பரிசுச் சான்றிதழ்கள் சென்றவாரம் அவருக்கு பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

'மண்ணில் தெரியுதொரு தோற்றம்' என்ற நாவலுக்கும், 'நாட்டுக்கூத்துக் கலாநிதி பூந்தான ஜோசேப்பு கலையுலக வரலாறு' என்ற ஆய்வு நூலுக்கும் இப்பரிசுகள் சென்ற ஆண்டில் இவருக்கு வழங்கப்பட்டன.

இவற்றிற்குரிய பரிசுத் தொகையான ஆயிரம் ரூபா இன்னமும் இவருக்கு வழங்கப்படவில்லை.

## சடலம் கடத்தப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ். ஆஸ்பத்திரியிலுள்ள பிரேத அறையிலிருந்த இளைஞரின் சடலம்ஒன்று நேற்று முன்தினம் காலை இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது. திங்கட்கிழமை நண்பகல் ஆயுதப் படையினர் இளைஞரின் சடலம் ஒன்றை அடையாளம் காண்பதற்காக யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்து ஒப்படைத்திருந்தனர்.

இச் சடலம் பழுதடைந்த நிலையில் இருந்ததாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (மா)

## இருவர் விடுதலை

[ஊர்காவற்றுறை]

காரைநகர் கடற்படை முகாமுக்கு அருகே கைதான இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் பிரஜைகள்குழுத் தலைவர் திரு. பி. நவரத்தினம், முகாம் பொறுப்பதிகாரி மேஜர் ஜெயவர்தனவைச் சந்தித்து விடுத்துள்ள வேண்டுகோளையடுத்த இவர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

திருநாவுக்கரசு, லோகநாதன் ஆகிய இருவருமே விடுதலையாகியவர்கள்.

## நாவற்குழி சன சமூக நிலையம்

[சாவகச்சேரி]

நாவற்குழி சன சமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் பொ. சுந்தரலிங்கம், உபதலைவர் அ. குகதாசன், செயலாளர் ஆ. நடராசா, உபசெயலாளர் வீ: பாஸ்கரன், பொருளாளர் சி. சிவராசா' விளையாட்டு கழக பொறுப்பாளர் செ. சதாசிவமூர்த்தி நிலையப்பொறுப்பாளர் வே இந்திரன், நிர்வாகசபை உறுப்பினர், அ. குருநபதன்.

## இருவருக்கு— கிளிநொச்சியில் மரணதண்டனை

[கிளிநொச்சி]

கிளிநொச்சி பழைய பஸ் நிலையத்தில் வைத்து இருவருக்கு துப்பாக்கியால் சுட்டு மரணதண்டனை நிறைவேற்றப் பட்டுள்ளது. ஒருவருக்கு கடந்த திங்கட்கிழமை இரவும், மற்றவருக்கு செவ்வாய்க்கிழமையும் இந்த மரண தண்டனை வழங்கப்பட்டது.

மரணமான இருவரும் போராளிகளைக் காட்டிக் கொடுத்தல், இராணுவத்திற்கு தகவல் கொடுத்தல் முதலான சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டார்கள் எனக் குற்றம்சாட்டி ''தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்'' உரிமை கோரியுள்ளது.

## துர்க்கை அம்மன் கொள்ளை: இந்து வாலிபர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

துர்க்காதேவி ஆலயத்தில் நடைபெற்ற கொள்ளைச்சம்பவத்தைக்கண்டித்து காரைநகர்கிழக்கு இந்துவாலிபர் சங்கம் அறிக்கைஒன்றை விடுத்துள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''துர்க்கா தேவி ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற கொள்ளைச்சம்பவம் தமிழ் இனத்திற்கும். சைவ உலகத்திற்கும் ஏற்பட்டுள்ள ஓர் இழுக்காகும். கலாச்சாரத்தையும பண்பாட்டையும் சமய நெறிகளையும் உலகம் போற்றும் அளவு பேணிப்பாதுகாத்துவந்த யாழ்ப்பாணத்தில் இதுபோன்ற கீழ்த்தரமான கொள்ளைகள் எம் இனத்தின் பெருமையையும்தாழ்த்திவிட்டது.

''சைவத்தையும் தமிழையும் வளர்த்து தம்வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து துர்க்காதேவி ஆலயத்தை அருள்மிகு திருத்தலமாக ஆக்கியபெருமை ஆலயத்தலைவி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கே உரியதாகும். அத்தகைய பெருமைக்குரிய அம்மையாருடன் கொள்ளையடித்தவர்கள் நடத்திய பேச்சுவார்த்தை மிக அநாகரியமானது. எதிர்காலத்திலும் இதுபோன்ற மிகக்கீழ்த்தரமான கொள்ளைகள் ஆலயங்களில் இடம்பெறுமல் சைவமன்றங்கள் அனைத்தும் ஒன்றுதிரண்டு எதிர்ப்புக்குரல் எழுப்பவேண்டும்.'' (மா)

## எந்த சைக்கிளும் களவாடப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசினர் ஆஸ்பத்திரி சைக்கிள் பாதுகாப்பு நிலையத்திலிருந்து சைக்கிள் ஒன்று களவாடப்பட்டதாக, பத்திரிகையில் வெளியான செய்தி தவறு என்றும் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்திலிருந்த எந்த சைக்கிள்களும் களவாடப்படவில்லை என்றும் சைக்கிள் பாதுகாப்பு நிலைய பொறுப்பாளர் திரு. சி. மகாலிங்கம் தெரிவித்தார்.

ஆஸ்பத்திரி வளவில், வெளி நோயாளர் பிரிவுக்கு முன்னல் வைக்கப்பட்டிருந்த சைக்கிளே களவாடப்பட்டதாகும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

## வேலைவங்கி படிவங்கள் விநியோகம்

[சித்தங்கேணி]

வலி-மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இதுவரை சுமார் 1,200 வேலை வங்கிப் படிவங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையினால் இரண்டாவது தடவையாக விநியோகம் செய்யப்படும் இவ் வேலை வங்கிப் படிவம் 18 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கே விநியோகிக்கப்படுகிறது.

## முத்திரைகள் தட்டுப்பாடு

[சித்தங்கேணி]

வட்டுக்கோட்டை. மாவடி சங்கானை, சித்தங்கேணி ஆகிய பகுதி மக்கள் முத்திரைகள் விமானக்கடிதம் ஆகியன வாங்கமுடியாமல் பெரும் அவதியுறுகின்றனர்.

சித்தங்கேணி, வட்டுக்கோட்டை, சங்கானை ஆகிய தபாற் கந்தோர்களில் கடந்த பல நாட்களாக முத்திரைகள் விமானக்கடிதம் ஆகியவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனல் இப்பகுதி மக்கள் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

## பதிவாளர்கள் இடமாற்றம்

(கன்னகம்)

மல்லாகம் ஆரம்ப நீதிமன்றத்தில் பிரதிபதிவாளராககடமையாற்றிய திரு. எம். சிவபாதசுந்தரம் பதிவாளராக பதவி உயர்வு பெற்று யாழ் மேல்நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மல்லாகம் ஆரம்ப நீதிமன்றத்திற்கு பதிவாளராக கிளிநொளிச்சி நீதவான் நீதிமன்றத்தில் கடமையாற்றிய திரு. எம். கந்தசாமி நியமிக்கப்பட்டுள்ளார். (மா)

## நல்லாசிரியர் செல்லையா

பரந்த உலகத்திலே வல்லவர்கள் பலரைக் காண்கின்ருேம். நல்லவர்கள் சிலரைக் காண்கின்ருேம். வல்லவராயும், நல்லவராயும் மிகச் சிலரை மட்டுமே காணக்கூடியதாக இருக்கின்றது,

அந்த வரிசையில் மிகச் சிலரில் ஒருவரே எம்மை விட்டகன்ற நல்லாசிரியர் செல்லையா அவர்கள். திருநெல்வேலியில் பிறந்து, எல்லார்க்கும் நல்லோனய் வாழ்ந்து ''அன்னயாவினும் கோடி புண்ணியம் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'' என்பதை உணர்ந்து ஆசிரியப்பணி என்னும் நற்பணியை தமது தொழிலாக ஆரம்பித்தார்.

'நீர்வேலி செல்லையா மாஸ்டர்' என்று அழைக்கப் பெறுகின்ற அளவிற்கு புகுந்த ஊர் மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டார்

இவரின் நன்மதிப்பிற்கு காரணமாய் அமைந்தவை இவரிடமிருந்த அன்பு, ஆர்வம், இரக்கம், ஈகை, எளிமை ஏழ்மை என்னும் நற்பண்புகளேயாகும்.

''உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லைக் கணடீர் பழுதுண்டு வேறோர் பணிக்கு'' என்னும் முதுமொழிக்கு இலக்காக உழவுத்தொழிலில் ஈடுபட்டு அத்துறையிலும் வல்லவரானர்.

இவரது அரசியல் ஞானம், ஆர்வம் என்பன மறக்கமுடியாதவையாகும். அன்னரின் ஆத்மா சாந்திவேண்டிப் பிரார்த்திப்போமாக.

—த. பரராஜசிங்கம்

# அரசியல் தீர்வே ஒரே மார்க்கம்!

[சுண்டுக்குளி]

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்ட அங்கத்தவர்களின்மகாநாடுகடந்த 24ம் திகதி முழுநாளும் நடைபெற்றது யாழ். மாவட்டச் செயலாளர் பொன். மாரசாமி மகாநாட்டிற்குத் தலைமை தாங்கினர்.

அரசியல் அறிக்கை, ஸ்தாபன அமைப்பு அறிக்கை, யாழ் மாவட்ட அரசியல் நிலை பற்றிய விவாதங்கள் நடைபெற்றன. புதிய மாவட்டக்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள் குறிப்பாக தொழிலாளர், விவசாயிகள் முற்போக்கு எண்ணம் கொண்ட மக்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் சகல பிரச்னைகளுக்கும் முற்றுப்புள்ளிவைக்கப்படவேண்டும். இதற்கான ஒரே மார்க்கம் அரசியல்தீர்வேயாகும். இதற்கான முதற்படி இனப்பிரச்னைக்கு நாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் மனதில்கொண்டு பிரதேச சுயாட்சி அடிப்படையில் அரசியல் தீர்வு காணப்பட்டு இம்மாகாணங்களில் சிவில் நிர்வாகம் அமைக்கப் பாடுபடவேண்டும் இதற்கான இயக்கத்தில் ஒவ்வொரு மக்கள் பிரிவினரும் தமது பங்களிப்பை செலுத்தவேண்டும். இதனை மையமாக வைத்து ஏனைய மக்கள் ஸ்தாபனங்களின் குறிப்பாக சிங்கள தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவைக்கோர வேண்டும் இப்பணியில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்டக்குழு தொடர்ந்தும் பாடுபடவேண்டும் என்றுஅறிவிக்கப்பட்டது.

முதலாளித்துவ சமூக அமைப்பை மாற்றிஒரு சோஷலிச சமூக அமைப்பு உருவாக்கப்படவேண்டும். நாம் இப்பொழுது இருக்கும் அமைப்பை மாற்றியமைக்காது சீர்திருத்தங்கள்மூலம் சோசலிசத்தை உருவாக்க முயற்சிப்பது நடைமுறைக்கு ஒவ்வாத செயல்பாடு என்பதை சுட்டிக்காட்டுவதுடன் வெகுஜன போராட்டங்களை ஆரம்பித்து மக்களின் பூரண ஆதரவுடன் செயல்பட்டு பிரச்னைகளைத் தீர்க்க முயற்சிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## வடபிராந்திய டிப்போக்களில் டீசல் தட்டுப்பாடு

[பச்சிலைப்பள்ளி]

வடபிராந்திய போக்குவரத்துச்சபை டிப்போக்களில் டீசலுக்குத் தட்டுப்பாடு நிலவுவதினல் தனியார் எரிபொருள் நிலையங்களில் டீசல் பெறப்பட்டு பஸ்சேவைகள் நடத்தப்படுகின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து தூர இடங்களுக்கு நடத்தப்படும் பஸ் சேவைகள் வவனியா தனியார் எரிபொருள் நிலையங்களில் டீசல் பெறப்பட்டே சேவைகள் தொடருகின்றன.

பிரயாணிகளுக்கு இடைஞ்சலின்றி சேவைகளை நடத்துவதற்காக இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.


# ஹோம் பிறுன்ஸ் லிமிட்டட்

## பஸ் சேவை

## மீண்டும் ஆரம்பம்

கொழும்பு — யாழ்ப்பாணம் — கொழும்பு

கொழும்பிலிருந்து புறப்படும் நேரம்: இரவு 10—00 மணி

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் நேரம்: காலை 8—00 மணி

**கட்டணம் ரூபா 100-00**

ரிக்கற் பெற்றுக்கொள்ளுமிடங்கள்.

ஹோம்பிறுன்ஸ் லிமிட்டட்
82, கன்னுதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24310

நியூலங்கா அலுமினியம் இன்டஸ்ரீஸ்
6, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
போன்: 23596

அன்னராஜா ஸ்ரோர்ஸ்
158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
போன்: 22608

நியூ பிரசிதா
337. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
போன்: 22480

## யாழ். பாடசாலைகள் கிரிக்கெட்போட்டி:

# யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் மிகவும் பரபரப்பூட்டும் நிலையில் நடைபெற்ற, மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி ஈற்றில் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி 47 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 157 ஓட்டங்களைப் பெற்றது. காப்டன் கிங்ஸிலி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 53 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன்பின் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி மிகசாதுரியமாக விளையாடி 44 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 158 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது

இக்கோஷ்டி ஒரு கட்டத்தில் 37 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 132 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது. இச்சந்தர்ப்பத்தில் வெற்றி தமக்கே, என்ற உற்சாகத்தில் சென். பற்றிக்ஸ் வீரர்கள் மைதானத்தில் காணப்பட்டபோதிலும், யாழ்ப்பாணக் கல்லூரியின் கடைசி துடுப்பாட்டச் சோடிகள் மிகவும் சாதுரியமாக துடுப்பெடுத்தாடி வெற்றியை தமதுபக்கம் திசைதிருப்பியது, பாராட்டுதற்குரியதாகும்.

மேற்படி போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

### அதிசயம் ஆனால் உண்மை!

மேற்படிப் போட்டியை கண்டுகளிப்பதற்காக, வட்டுக்கோட்டையிலிருந்து பெரும் திரளான ரசிகர்கள் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் குழுமியிருந்தார்கள்

கூடுதலான பார்வையாளர்கள் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் 2-வது மேல் மாடியில் இருந்து ஆட்டத்தை பார்வையிட்டுக்கொண்டிருந்த போது யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்விகற்கும் 7 வயது சிறுவன் சுசான், யாரும் எதிர்பாராத விதமாக, 2-வது மாடியிலிருந்து தவறி நிலத்தில் விழுந்து விட்டான். தெய்வாதீனமாக அச்சிறுவனுக்கு எதுவித சிறு காயமோ அல்லது சிறு நோவோ ஏற்படாத நிலையில் எழுந்து நின்றதை பார்த்த அனைவரும் ஆச்சரியத்திலும், ஆனந்தத்திலும் மூழ்கிவிட்டனர்.

இச்சிறுவனை, சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் உடனடியாக தனியார் மருத்துவமனையில், டாக்டரின் பரிசோதனைக்குட்படுத்தியபோது, அச்சிறுவனுக்கு எதுவித நோவோ வலியோ ஏற்படவில்லை என கூறப்பட்டதாம். (வி)


ஆனந்தி
வீடியோ சினிமா
[மனோகராவில்]
ரி. ராஜேந்தர் சிவகுமார், நளினி நடித்த
'தங்கைக்கோர் கீதம்'

றீகல்
தினசரி 10-30, 2-30
Michael Gaine......in
A BRIDGE TOO FAR
(War Film)

றீகல் மினி
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க இன்று மட்டும்
மோகன், மாதவி நடித்த
பாலாஜியின்
நிரபராதி

மனோகரா
இன்றுமுதல்
ரி. ராஜேந்தர், சிவகுமார், நளினி நடித்த
தங்கைக்கோர் கீதம்
(கலர்)

லிடோ சினிமா
10-30 am, 2-00 pm, 4-00 pm
"Still of the Night"
Adults Only

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2.30
சிவாஜி, கே. ஆர். விஜயா, பிரபு நடித்த
நீதிபதி
(கலர்)

WINDSOR
Daily 10-30, 2-00, 4-15
விருதுபெற்ற நடிகர்கள் ஜெஸிக்கா லாங்கே, ஜாக் நிக்கல்ஸன் நடித்த
THE POST MAN ALWAYS RINGS TWICE
கடைசிச் சில தினங்கள் மட்டும்

யாழ். வின்சர் மினி
தினசரி 10-30, 2-00
சிரஞ்சீவி, சுஹாசினி சில்க் சுமிதா நடித்த
"சேலன்ஞ்"
பயங்கரச் சண்டைகள், கவர்ச்சி நடனங்கள் நிறைந்த சித்திரம்


### உலகக் கிரிக்கெட்:

## பாகிஸ்தானுக்கு 3-வது இடம்

(ஸாஜா)

ஸாஜாவில் நாலு நாடுகள் பங்குபற்றும் உலக கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் 3 வது இடத்தைத் தட்டிக்கொண்டது.

இங்கிலாந்துக்கும், பாகிஸ்தானுக்குமிடையில் இப்போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. போட்டியின் ஆரம்பத்தில் 'பூவா-தலையா' நாணயச் சுண்டலில் வெற்றி பெற்ற இங்கிலாந்துக் கோஷ்டி பாகிஸ்தான் கோஷ்டியை முதலில் துடுப்பெடுத்தாடப்பணித்தது, பாகிஸ்தான் கோஷ்டி 50 ஓவர்களில் 175 ஓட்டங்களைப் பெற்றது. இங்கிலாந்துக் கோஷ்டி 132 ஓட்டங்களை மட்டுமே பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இப்போட்டியில் பாகிஸ்தான் கோஷ்டி 32 அதிகப்படியான ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

### நாளை சாம்பியன் மோதல்

இக்கிரிக்கெட் சுற்றுப் போட்டியின், இறுதி சாம்பியன் மோதல் நாளை நடைபெறவுள்ளது. இம்மோதலில் தற்போதைய உலகச் சாம்பியனை இந்தியாவும், அவுஸ்திரேலியாவும் மோதுகின்றன (வி)

### ரூபவாஹினி

மாலை

5-00 செய்திகள்
5-05 உடல்நலம் பற்றிய நிகழ்ச்சி
5-30 சிங்கள நிகழ்ச்சி
6-00 ஆங்கில நிகழ்ச்சி
6-30 செய்திகள் [தமிழ்]
6-50 ஆங்கில நிகழ்ச்சி தொடரும்
7-25 சிங்கள நிகழ்ச்சி
8-00 செய்திகள் [சிங்களம்]
8-25 சிங்களதொலைக்காட்சி நாடகம்
9-00 செய்திகள் [ஆங்கிலம்]
9 20 உள்ளூர் கலைஞர்கள் சம்பந்தமான நிகழ்ச்சி
9-50 சர்வதேச இளைஞர் ஆண்டு 85 நிகழ்ச்சி
10-00 விளையாட்டு நிகழ்ச்சி
10-30 ஒளிபரப்பு முடிவு.

## சமாதான நீதிச் சபை

(யாழ்ப்பாணம்)

பலாலியில் சமாதானநீதிச் சபையொன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. சபை உறுப்பினர்கள் வருமாறு: தலைவர் மி. ஆகபீற்றஸ், உபதலைவர் த தங்கராசா, செயலாளர் கி மாசிலாமணி, பலாலி [விசேஷ சேவை அலுவலர்] உபசெயலாளர் வே. பொன்னுத்துரை பொருளாளர் பி, லெனுட், (மா)

## யாருடையது?

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக்கிளையில் 1601-ம் இலக்கக் கணக்குக் குரிய காசோலைப் புத்தகத்தை சங்கானையைச் சேர்ந்த திரு. செல்லமுத்து செல்வரத்தினம் என்பவரும், திரு. டேவிட் அலெக்சாண்டர் என்பவருக்கு வெளிநாட்டிலிருந்து வந்த ரூபா 3650/-க்கான காசோலையை தாவடியைச் சேர்ந்த திரு. மு. சாமுவேல் என்பவரும், திரு. ரி தங்கராசா என்பவர் ஒரு திறப்பினையும் கண்டு எடுத்து 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

## அமைதி வேண்டிப் பிரார்த்தனை

(சுன்னாகம்)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமை மாலையில் விசேட பூஜையொன்று நடைபெறுகிறது.

நாட்டில் அமைதி, சமாதானம் நிலவ வேண்டுமெனவும், தமிழ் மக்களிடையே ஒற்றுமை வேண்டியும் இவ்விசேட பூஜை நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டது. (மா)

## அங்கத்தவருக்கு கடன் வசதி

[ஊர்காவற்றுறை]

யாழ்ப்பாணம் சௌக்கி சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கத்தின் 27வது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது

பொதுக் கூட்டத்தில் அங்கத்தவர்களுக்கு ரூபா 7.500 கடன் வழங்குவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாகவும் விரும்பியோர் தமக்கு விண்ணபபசகலாமெனவும் சங்கச்செயலாளர் திரு சி செல்லத்துரை அறிவிக்கின்றார்.

### 'அமிர்' பூரண சுகமடைய

## ஆலயங்களில் விசேட பூசைக்கு ஏற்பாடு!

[யாழ்ப்பாணம்]

தமிழ் நாட்டில் சிகிச்சை பெற்றுவரும் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் பூரண சுகமடைய மேலும்பல ஆலயங்களில் விசேட பூசை, ஆராதனை ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு தொகுதியிலுள்ள ஆலயங்களிலும், விசேட பூசைக்கான ஏற்பாடுகளை அந்தந்த தொகுதி கூட்டணி ஆதரவாளர்கள் செய்துவருகின்றனர்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், தெல்லிப்பளை துர்க்கை அம்மன்கோவில், கீரிமலை சிவன் கோவில் ஆகியவற்றில் நாளை விசேட பூசைகளை நடத்துவதற்கான ஏற்பாட்டை தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. சிவமகாராசாவும் மற்றும் அப்பகுதி ஆதரவாளர்களும் செய்துள்ளனர். (க)

## விசாரணைக்கு உத்தரவு

[சுண்டுக்குளி]

நீர்வேலி ப. நோ கூ, சங்க இருபாலைக் கிளையொன்றில் பாவனைக்கு உதவாத அரிசி பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுவதாக பாவனையாளர் ஒருவர் யாழ். உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்கு முறையிட்டதுடன் அவ்வரிசியின் மாதிரியையும் எடுத்து வந்துகாட்டியுள்ளார். இதைக் கவனத்திற்கெடுத்துக் கொண்ட உணவுக்கட்டுப்பாட்டதிகாரி சம்பந்தப்பட்ட ப. நோ. கூ. சங்கத்தின் மீது பூரண விசாரணை நடத்துவதற்கு உத்தரவிட்டுள்ளார்.

## ஓய்வூதியம் வழங்கப்படவில்லை

[இறுப்பிட்டி]

புங்குடுதீவு, நயினாதீவு ப. நோ. கூ. சங்கத்தின்கீழ் இயங்கிவரும் கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு கடந்த கார்த்திகை மாதத்துக்கான ஓய்வூதியம் மட்டும் இன்னமும் வழங்கப்படவில்லை என தெரியவருகிறது.

## இளைஞர் சக்தி...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வருட இளைஞர் ஆண்டு தொடர்பான செயல் திட்டங்களை வரைந்து செயல்படுத்துவதற்கென பின்வருவோரைக் கொண்ட நிர்வாக சபையொன்று தெரிவு செய்யப்பட்டது.

தலைவர் அதிபர் திருமதி பா. கந்தசாமி, செயலாளர் ஆசிரியை திருமதி சி, விஸ்வலிங்கம், உறுப்பினர் செல்வன்கள் கி. ஜெயபால், கே. மகேந்திரன், கே. டார்வின், ரி. தவச்செல்வன், எஸ். லோறன்ஸ் செல்விகள் எஸ். மேரிகிறிஸ்ரி, பி. மரியககில்டா, ஆர், பிரிட்டா, ஏ இமல்டா, கே. மாலினி.

இளைஞர் ஆண்டு சம்பந்தமான கருத்தரங்குகள் நடத்துகலை, நிகழ்ச்சிகள் பட்டிமன்றங்கள நடத்துதல்போன்ற செயல்திட்டங்களை நிறைவேறுவதற்கென ஆசிரியர் திருவாளர்கள் ஏ. கார்த்திகேயன், ஆ கமலநாதன், ஜ. வி, இராதாகிருஷ்ணன், க கணேசலிங்கம் ஆகியோரைக்கொண்ட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

## ஆசிரியர் பற்றுக்குறை

[சுன்னாகம்]

தெல்லிப்பழை கட்டுவன் புலம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர்கள் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளதால் மாணவர்கள் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலைக்கு மேலதிகமாக 12 ஆசிரியர்கள் தேவைப்பட்ட போதிலும் நான்கு பேரே கடமையாற்றுகின்றனர். வசதிக்கட்டணத்தில் ஐந்து பேர் கற்பிக்கின்றனர் இதனால் மாணவர்களின் நிதிவிண்விரயமாவதுடன் அபிவிருத்திவேலைகளும் மேற்கொள்ள முடியாது தடைப்பட்டுள்ளது.

மேற்படி வித்தியாலயத்தில் நடைபெற்ற பாடசாலை அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் ஆசிரியர் பற்றுக்குறையை நீக்குமாறு தீர்மானம் எடுத்து கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. [மா]

## சான்றிதழ்கள் வழங்கப்பட்டது

(சித்தன்கேணி)

வலிமேற்கு உதவி அரசாங்கதிபர் பிரிவுக்குட்பட் சுமார் 40 யுவதிகளுக்கு அண்மையில் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டது.

வலிமேற்கு உதவி அரசாங்கதிபர் பிரிவுக்குட்பட்ட சுமார் 50 இளம்யுவதிகளுக்கு யாழ் திட்டமிடல் பகுதியனரின் ஆதரவுடன் உணவுப் போஷாக்கு சம்பந்தமான பயிற்சி நெறியும் முதலுதவிவகுப்பும் நடைபெற்றது இப்பயிற்சி நெறியில் பங்குபற்றிப் பரீட்சையில் சித்தியடைந்த சுமார் 40 பெண்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் யாழ் மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி எஸ் கனேந்திரனால் வழங்கப்பட்டது.

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் பரிசளிப்பு விழாவில் யாழ் மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ் சுவாமிநாதன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.


அட்டன் நஷனல் வங்கியின் கொள்ளையால்
பாதிக்கப்பட்டோரின்
2வது கூட்டம்
இடம்: யாழ்ப்பாணம் வை. எம். சீ. ஏ. கட்டிடம்
(Y. M. C. A. Kandy Road, Jaffna)
காலம்: 30-03 85 சனிக்கிழமை
நேரம்: காலை 9-00 மணி
சம்பந்தப்பட்ட அனைவரையும் சமூகமளிக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.
R. J. குணரத்தினம்
அழைப்பாளர்
இல; 50, பலாலி வீதி,
கோண்டாவில்.
2528

## இந்தியாவின்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ்மக்கள் பிரச்னையைப் பொறுத்தவரை இந்தியாவின் கொள்கையில் மாற்றமில்லை என்று தெரிவித்த திரு. பண்டாரி, மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி கொண்டிருந்த கொள்கையே தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்றும் கூறினார்.

### ஜே. ஆர். – பண்டாரி சந்திப்பு

(கொழும்பு)

இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் திரு. ரமேஷ் பண்டாரி ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைச் சந்தித்து, இலங்கையின் இனப்பிரச்னை தொடர்பான இருச்சுற்றுப்பேச்சுக்களை நேற்று நடத்தினார்.

இப்பேச்சுவார்த்தையின் விபரங்கள் பற்றி எதுவும் வெளியிடப்படவில்லை.

திரு. ரமேஷ் பண்டாரி எதிர்க்கட்சித் தலைவர் திரு, அனுரா பண்டாரநாயக்கா, சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா ஆகியோரை நேற்றுச் சந்தித்து, இலங்கையின் இனப்பிரச்னை குறித்து கலந்துரையாடினார்.

திரு. ரமேஷ் பண்டாரி இலங்கையின் இனப்பிரச்னை குறித்து பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா, தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி, கிராமியத் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், உள்நாட்டமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் ஆகியோரைச் சந்தித்து, ஏற்கனவே விரிவான பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரிக்குநேற்று பகல் போசன விருந்தளித்தார். (வெ)

### நீலனையும் சந்தித்தார்

திரு. பண்டாரி நேற்றுமாலை டாக்டர் நீலன் திருச்செல்வத்தையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்

இலங்கைப் பிரச்னையில் நிரந்தரத்தீவு காண வேண்டும் என்பதில் இந்தியா அக்கறை கொண்டுள்ளதாகவும், தமிழ் மக்கள் மத்தியிலுள்ள சகல இயக்கங் ளும் இந்த முயற்சியில் ஈடுபடவேண்டும் என அவர் திரு திருச்செல்வத்திடம் வேண்டுகோள் விடுத்ததாகத் தெரிகிறது.

---

## மரண அறிவித்தல் (திருத்தம்)

### க. பரராசசிங்கம்

நேற்று பிரசுரிக்கப்பட்ட வைத்திய சிரோன்மணி க பரராசசிங்கம் அவர்களின் மரணஅறிவித்தலில் அன்னார் முன்னாள் நல்லூர் கிராமாட்சிமன்ற உறுப்பினரும், சமாதானநீதவானுமான (J. P.) க இளையதம்பி அவர்களின் அன்புச் சகோதரருமாவார் என்ற தொடர் தவறவிடப்பட்டுள்ளது, அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10-00 மணிக்கு கோம்பயன் மயானத்தில் நடைபெறும். —மகன் யோகநாதன் (2533)

---

## மரண அறிவித்தல்

### செல்லையா நடராசா

வேலணை கிழக்கைச் சேர்ந்தவரும், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் வசிப்பவருமாகிய செல்லையா நடராசா (அரசாங்க மரக்கூட்டுத்தாபன ஒப்பந்தக்காரர்) C. T B அவர்கள் 25-03-85 திங்கட்கிழமை காலமாகிவிட்டார். மரணச்சடங்குபற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மனைவி, மக்கள்

2532

---

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை குலசேகரம்பிள்ளை

(இளைப்பாறிய பொறியியலாளர் கட்டிடத் திணைக்களம், வவுனியா)

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை குலசேகரம்பிள்ளை அவர்கள் 26-3-85 அன்று காலமானார். அன்னார், புனிதவதியின் அன்புக்கணவரும், ரவீந்திரா, லோசேந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் புதன்கிழமை (27-3-85) மாலை ஊரெழு பொக்கணை மயானத்தில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். 2514

---

## மரண அறிவித்தல்

### நடராஜா ஞானசுந்தரம்

கைலாயபிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த ஞானசுந்தரம் காலமானார். இவர் காலம்சென்ற நடராஜா தம்பதிகளின் அன்பு மகனும், பவானிப்பிள்ளை, வைத்திலிங்கத்தின் அன்புப் பேரனும், ஞானம்பிகையின் அன்புக்கணவரும், பவானி, கஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம்சென்ற ஞானகணேஷன் (கணக்காளர், லண்டன்), திருமதி ஞானம்பிகை. அரியேந்திரன், நவரட்ணராஜா (நைஜீரியா), ஞானேந்திரன் (முன்னாள் விரிவுரையாளர் தொழில் நுட்ப கல்லூரி, ஞானசேகரம் (கனடா), திருமதி ஞானசோதி பாஸ்கரன், ஞானலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவர். அன்னாரின் ஈமச்சடங்குகள் நல்லூர் செட்டித்தெருவிலுள்ள அவரின் இல்லத்தில் வியாழக்கிழமை (இன்று) காலை 10 மணியளவில் நடைபெறும். 2522

---

### பாஸ் போர்ட்..:

(3ம் பக்கத்தொடர்ச்சி)

சகலநாடுகளுக்குமான பாஸ்போர்ட் பெற 15,000 ரூபா பெறுமதியான செந்தப்பிணைப் பத்திரத்தில் ஒருவர் பிணை நிற்கவேண்டும்.

வருமானவரி கட்டுபவர்கள், செல்வவரிகட்டுபவர்கள், ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட அடிப்படை மாதச்சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர், 1250க்கு மேற்பட்ட அடிப்படைச் சம்பளம்பெறும் வர்த்தக அல்லது கூட்டுத்தாபன உத்தியோகத்தர். பிணைநிற்பதற்குத் தகுதியானவர்.

---

### தெல்லிப்பழை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

காமத்தம்பி (50 வயது) பலியானார். சங்க தலைமைக்காரியாலயத்தில் நின்றபோது முகட்டு ஓட்டை ஊடுருவிச் சென்ற துப்பாக்கிக்குண்டு இவரைத் தாக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து ப. நோ கூ சங்கத்தின் சகல கிளைகளும், தலைமைக்காரியாலயமும் நேற்று மூடப்பட்டது இன்றும் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் நேற்று நண்பகல் பதட்டம் நிலவியது.

பாடசாலைகள் நண்பகலுடன் மூடப்பட்டன. பெற்றோர்கள் பாடசாலைகளுக்கு வந்து தங்கள் பிள்ளைகளைக்கூட்டிச்சென்றனர்

சில பாதைகளில் மினிபஸ் சேவை நடைபெறாததினால், மாணவர்களும், பொதுமக்களும் பாதிக்கப்பட்டனர்.

நேற்று மாலை வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. (க)

---

### அமைச்சர் அல்விஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றுப்பெறாத நிலையில் அவர் இங்கேயே இருக்கும்போது எதுவிதகருத்தையும் வெளியிடமுடியாது என்றார் அமைச்சர்.

---

### ஓய்வுபெறும் நீதிபதிக்கு இன்று பிரிவுபசாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மேல்நீதிமன்ற நீதவான் ஜே. ஜீ ஆசிர்வாதம் இளைப்பாறுவதையொட்டி இன்று யாழ் மேல்நீதிமன்றத்தில் வைபவரீதியான அமர்வும், பிரியாவிடையும் இடம் பெறும்.

நீதிபதிகள், சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் இந்தவைபவத்தில் கலந்துகொள்வார்கள். (கு)

---

## இப்படியும் நடக்கிறது

### நேற்றுக் காலை.

ஏழரை மணிக்குச் சற்றுப் பின்னர்; திருச்சி வானொலி நிலையத்திலிருந்து சினிமாப் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருந்தது.

இடையில் ஒரு ஒலிபரப்பு. நிதானமான அந்தக்குரல், இப்படிக் கூறியது:

''...உங்களுக்கு ஒரு சிறிய விண்ணப்பம்... இப்பொழுது பரீட்சைக் காலம். மாணவ, மாணவிகள் தங்களின் முழுக் கவனத்தையும் படிப்பில் செலுத்திக் கொண்டிருப்பார்கள். தயவுசெய்து உங்கள் வானொலியின் ஒலி அளவைக்குறைத்து; மாணவ, மாணவிகளின் படிப்பைக் குழப்பாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் வானொலியின் ஒலி அளவை குறைத்துக் கொள்வதன்மூலம், உங்கள் குழந்தைக்கு மட்டுமல்ல; பக்கத்து வீட்டுக் குழந்தைகளின் பரீட்சைக்கும் நீங்கள் பேருதவி செய்தவர்களாவீர்கள்...''

காலையில் ஏழு மணிக்கே முக்கலும் முனகலுமுள்ள படுகீழ்த்தரமான- உணர்ச்சி கெட்ட பாடல்களை தினம் தினம் ஒலிபரப்பும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவைப் பகுதியினருக்கு இது சமர்ப்பணம்!

-ஊடுருவி

---

## ஆசிரிய பதவி நேர்முகப் பரீட்சை: இவர்களுக்கு சந்தர்ப்பம்!

[கொழும்பு]

[நேற்றைய தொடர்ச்சி]

கடந்த டிசம்பர். ஜனவரி மாதங்களில் நடைபெற்ற ஆசிரியர் நேர்முகப் பரீட்சைகளில் தவிர்க்கமுடியாத காரணங்களினால் தோற்றமுடியாது போனவர்களுக்கு வரும் ஏப்ரல் 2ம்,3ம் திகதிகளில் மீண்டும் ஒரு பரீட்சை நடைபெறவுள்ளது. அவர்களின் விபரம்:

**கொழும்பு மாவட்டம்**

செல்வி ரி. சுகந்தி கொழும்பு, எம். எஸ். செயத் அமீன் கொழும்பு, செல்வி தர்மலிங்கம் கொழும்பு, செல்வி கலையரசி கொழும்பு.

**இரத்தினபுரி மாவட்டம்**

புள்ளநாயகம் இரத்தினபுரி, எம் தில்லைநாதன் யாழ்ப்பாணம், அகிலநாயகி இரத்தினபுரி, தில்லைநாதன் வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

**கண்டி மாவட்டம்**

செல்வி எஸ். கனகேஸ்வரி கண்டி.

**அம்பாறை மாவட்டம்**

அன்ரனி ராஜன் சம்மாந்துறை, எல். அப்துல் சத்தார அக்கரைப்பற்று.

**நுவரேலியா மாவட்டம்**

செல்வி வெல்சி கிம்மா பண்டத்தரிப்பு. ஜெ. ஜெயானந்தன் இளவாலை, செல்வி எஸ். சுகந்தா இளவாலை, செல்வி கௌசல்யா, செல்வி எஸ். ரேவதி கொழும்பு. செல்வி ஆர். ரேவதி திருகோணமலை. (மிகுதி நாளை)

---

### அமைச்சரவை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தமிழ்த் தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்க 400 பேருக்கு இத்துறைகளில் பயிற்சிஅளிக்க நேற்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது அமைச்சர் செ. இராசதுரையின் சிபார்சின் பேரிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

---

### கிளிநொச்சி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இன்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

தமிழ்மக்களை இன்று எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள், தமிழ்மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள், பல்கலைக்கழக புதிய திருத்தச் சட்ட வெள்ளை அறிக்கை ஆகியவைகளை முன்வைத்து இம்மாணவர்கள் பகிஷ்கரிப்பு நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### டில்லியில் கண்டன ஊர்வலம்

(புதுடில்லி)

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை கண்டித்து புதுடில்லியில் நேற்றுக்காலை பெரும் ஊர்வலம் நடந்தது

புதுடில்லியில் 'கெனத்பிளே' ஸிலிருந்து ஆரம்பமான இந்த ஊர்வலத்தில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

''இலங்கைத்தமிழர் பிரச்னைக்கு உடனடித்தீர்வுதேவை. இலங்கைத்தமிழர்களுக்குபாதுகாப்பு அளியுங்கள்'' என்று ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் கோஷித்தனர்.

---

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து கதிரேசு

இளைப்பாறிய வனபரிபாலன உத்தியோகத்தர் சரவணமுத்து கதிரேசு காலமானார் அன்னார் கேதீஸ்வரியின் அன்புக்கணவரும், நந்தகோபன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), டாக்டர் நந்ததேவி (அவுஸ்திரேலியா), நிமலினி (சட்டத்தரணி, சாவகச்சேரி), நந்தபாலன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா) டொலி நந்தினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், சந்திரலேகா (அவுஸ்திரேலியா), டாக்டர் சந்திரரெட்ணம் (அவுஸ்திரேலியா), அம்பிகைபாலன் (சட்டத்தரணி,சாவகச்சேரி), ரோகினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புமாமனாரும் ஆவார் அன்னாரின் பூதவுடல் இன்று (28-3-85 வியாழக்கிழமை மாலை மூன்று மணிக்கு 18/4 சீனியர் ஒழுங்கை, வண்ணார்பண்ணை கலட்டி அம்மன் கோவிலடியிலிருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

—தகவல்: செ. அம்பிகைபாலன் J. P. U. M
சட்டத்தரணி, சாவகச்சேரி.

2534

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] வீதி, 65ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka unde Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.